பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 21 புதன்கிழமை 03.02.2021 கதிர் 90

**இனி இது ரகசியம் அல்ல!**

இலங்கைத் தமிழர்கள் அரசியல் நீதி கேட்டு இன்று தொடக்கம் சனிக்கிழமை வரை முன்னெடுக்கும் - பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான - அரசியல் போராட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம் பக்கம்02

# பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டம்; முஸ்லிம்களும் பூரண ஒத்துழைப்பை வழங்குங்கள்

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் வேண்டுகோள்



பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரைக்கும் தமிழ்ச் சகோதர சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடைபவனி ஆர்ப்பாட்டத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு முஸ்லிம்களிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான அடக்குமுறைகளை எதிர்த்தும், கண்டித்தும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்டம், இன்று தொடங்கி எதிர்வரும் 6ஆம் 11

# தமிழின அழிப்புக்கு எதிராக ஓரணியில் திரள வேண்டும் தமிழ்பேசும் உறவுகள்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அறைகூவல்




தமிழ்பேசும் மக்களை இலக்குவைத்து இலங்கை அரசு மேற்கொண்டு வரும் அராஜகச் செயல்களைக் கண்டித்தும், வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகவும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஐ.நாவிடம் நீதி கோரியும் சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை இன்று முதல் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ்பேசும் உறவுகளும் ஓரணியில் திரண்டு ஆதரவு வழங்க வேண்டும்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்,

ஊடகங்களுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். 2

## ஒரு இலட்சத்து 18 ஆயிரம் பேருக்கு ஏற்றப்பட்டது கொரோனாத் தடுப்பூசி



இலங்கையில் இதுவரை ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 767 பேருக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று மாத்திரம் 23 ஆயிரத்து 217 பேருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 2

## யாழ்.குடாநாட்டில் முப்படையினர் வசம் உள்ள தனியார் காணிகள் ஒப்படைக்கப்படவேண்டும்

### மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முப்படையினர் வசமுள்ள தனியார் காணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி 11

## 65 ஆயிரத்தைத் தாண்டியது தொற்றாளர் எண்ணிக்கை!

### நேற்றும் 715 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்றும் 715 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கமைய நாட்டில் 2

ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட

## மேலும் எழுவர் சாவு; கொரோனா சாவு 330

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஒன்றரை வயது ஆண் குழந்தை உட்பட மேலும் 7 பேர் சாவடைந்துள்ளனர். 2

## ஆங் சான் சூசி தடுப்பு சிலர் நேற்று விடுவிப்பு



மியன்மாரில் நாட்டுத் தலைவர் ஆங் சான் சூசியுடன் கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் 11

31 ஆம் ஆண்டில் ....
"கல்வியே கண் மற்றெல்லாம் பின்"
**ஏசியன் அக்கடமி**
(கோவியடி, கொக்குவில் மேற்கு)
★ தரம் 01 முதல் O/L வரையிலான வகுப்புகள் சிறப்பாக ஆரம்பமாகிவிட்டன.
★ மாணவர்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ புலமைப்பரிசில், ICT வகுப்புகளும் ஆரம்பமாகி விட்டன.
நிர்வாக இயக்குநர்:
திரு. ஷங்கர் வாமன்
(விஞ்ஞான ஆசிரியர்)
(விஞ்ஞான Zoom வகுப்புகளும் நடைபெறுகின்றன)
தொடர்பு: 0777404883

# போராட்டத்தில் பங்கேற்க கிழக்கில் 32 பேருக்கு தடை

தமிழ்பேசும் மக்களுக்கு நீதி வேண்டி பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 32 பேருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் கல்முனை நீதிவான் நீதிமன்றங்களால் இந்தத் தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வின்போது, மக்களைத் தூண்டிவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றன எனத் தெரிவித்து திருக்கோவில் பொலிஸார் தாக்கல் செய்த 2

## இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு அறிவியல் ஆதாரங்களுடன் பதிலளிப்போம்

### ஜெனிவா அமர்வு குறித்து கோட்டா அரசு வீறாப்பு பேச்சு



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரின்போது, இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு அறிவியல் ஆதாரங்களுடன் விரிவாகப் பதிலளிப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பில் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மூலம் தடை உத்தரவு பெற்ற பொலிஸார் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, வெல்லாவெளி நீதிவான் நீதின்றங்களில் தடை உத்தரவுகளைப் பெற்றனர். கல்முனை மாவட்டத்தில் கல்முனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் நீதிவான் நீதிமன்றங்களிலும் தடை உத்தரவுகள் பெறப்பட்டன.

அரசியல் போராட்டங்கள் 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' என்று பெயரிடப்பட்டமையால் இன்று முதல் நாள் பொத்துவில் - கிழக்கில் - அது ஆரம்பிக்கும் என்று கருதியோ என்னவோ அங்கு தான் நேற்றுவரை உத்தரவு பெறப்பட்டுள்ளது. வடக்கில் இன்னும் நீதிமன்றங்களைத் தவறாக வழிநடத்தித் தடை உத்தரவு பெறும் நகர்வுகளை பொலிஸார் ஆரம்பிக்கவில்லை. பெரும்பாலும் இன்று வல்வெட்டித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இந்த உத்தரவுகளைக் கோரக் கூடும்.

நேற்றுக் கல்முனை நீதிவான் நீதிமன்றம் எடுத்த எடுப்பில் பொலிஸாரின் கோரிக்கையை ஏற்று தடை உத்தரவை வழங்கவில்லை. நீண்ட வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர்தான் பொலிஸாரின் ஒருதலைப்பட்சமான கோரிக்கைக்கு நீதிமன்றம் இணங்கியது.

குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 106(i) இன் கீழ் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் ஆபத்து இருப்பதாகக் காட்டியே இந்த உத்தரவுகளை பல்வேறு நீதிவான் நீதிமன்றங்களிலும் பொலிஸார் பெற்றுள்ளனர். சம்பந்தப்பட்ட நபர்கள் இல்லாமலேயே அவர்களுக்கு எதிரான தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்தத் தடை உத்தரவுகளை நீக்குமாறு கோரி சம்பந்தப்பட்ட நபர்கள் 106 (iii) ஆம் பிரிவின் கீழே நியாயமான காரணங்களை முன்வைத்து விண்ணப்பிக்க முடியும். நீதிமன்றம் அந்த நியாயங்களை ஏற்றுக் கொண்டால், தான் முன்னர் விதித்த தடைகளை நீக்கலாம். இது தான் சட்ட ஏற்பாடு.

இந்த ஏற்பாட்டின் கீழ் இன்று காலை மட்டக்களப்பு நீதிமன்றங்களில் பிரசன்னமாகி தடைகளை நீக்கும்படி வாதிடுவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், தமது கனிஷ்ட சட்டத்தரணி கேசவன் சயந்தன் சகிதம் நேற்றிரவு மட்டக்களப்புக்கு விரைந்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள ஆறு நீதிவான் நீதிமன்றங்களில் இயலுமானவற்றில் இன்று சுறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அவர் வாதாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி தடை உத்தரவு மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ஒருவருக்கு எதிராகவும் விடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் -

அந்த உத்தரவுக்கு எதிராக நேற்று நீதிமன்றத்தில் மனுச் செய்து வாதிடப்படும் என்றும் - நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அது நேற்று நடக்கவில்லை.

நான் விடயத்தை எழுதித் தகவல் வெளியிட்டமையால் என்னவோ அந்த ஊடகவியலாளர் பணிபுரியும் கொழும்பு ஊடக நிறுவனம் அவருடன் தொடர்பு கொண்டு பொலிஸாருக்கு எதிராக நீதிமன்றத்துக்குப் போகவேண்டாம் என்று பணிப்புரை விடுத்து விட்டதாக அறியவந்தது. அதனால் அந்த வழக்கு நேற்றுத் தாக்கலாகவில்லை.

அந்த ஊடக நிறுவனம் அப்படி நடப்பது எனக்கு ஒன்றும் ஆச்சரியம் அல்ல. எதிர்பார்த்ததுதான்.

யுத்த காலத்தில் தமிழர்களின் வீடுகள் ஒவ்வொன்றுக்குள்ளும் நுழைந்து செய்தி சொல்லும் வாய்ப்பு அதற்கு இருந்தது.

அச்சமயத்தில், தமிழினத்தின் ஆன்மாவில் கொடூரமான இடியாக இறங்கும் தாக்குதல் ஒன்று 2006 ஆம் ஆண்டு ஓகஸ்டில் நடந்தது. முல்லைத்தீவு வன்னி புனம் செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது நடத்தப்பட்ட கொடூர விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் 54 பள்ளிச் சிறார்கள் உட்பட 61 பேர் படுகொலையுண்டனர்.

இந்தத் தாக்குதல் கொடூரம் குறித்து சில வாரங்கள் கழித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் அலரிமாளிகையில் காலை உணவுடன் பத்திரிகை ஆசிரியர்களின் சந்திப்பு நிகழ்வில் கடுமையான வார்த்தைப் பரிமாறல்களுடன் நான் மோதி விவாதிக்கும் சம்பவம் நேர்ந்தது. அது குறித்து ஏற்கனவே இப்பத்தியில் நான் ஒரு தடவை விவரித்துமுள்ளேன். வாசகர்களுக்கு அது நினைவிருக்கக் கூடும். அது விடயமல்ல.

அந்த விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் நடந்த அதே தினத்தில் கொழும்பில் பாதுகாப்பு வாகனங்களுடன் சென்ற ஒரு வாகன அணி மீது ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த வாகன அணியில் பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் பயணித்தார் என்றும் கூறப்பட்டது. எனினும் அவருக்கு எந்த ஊறும் நிகழவில்லை.

அந்தச் சமயத்தில் தமிழர்களின் வீடுகள் ஒவ்வொன்றுக்குள்ளும் ஊடுருவும் செல்வாக்கு பெற்றிருந்த அந்த ஊடகம், வன்னிபுனம் செஞ்சோலைக் குண்டு வீச்சை அப்படியே முற்றாக இருட்டடிப்புச் செய்து மறைத்தது. கொழும்புத் தற்கொலைத் தாக்குதல் குண்டுவெடிப்பை மட்டும் Breaking News ஆக - பரபரப்பாக - விடாது தொடர்ந்து வெளியிட்டு, செஞ்சோலைக் குண்டு வெடிப்பை நடக்காதது போலவே அமுக்கி சிங்கள அரசின் மீதான தனது விசுவாசத்தை வெற்றிகரமாக வெளிப்படுத்தியது அது.

அத்தகைய ஊடகம் தனது ஊடகவியலாளரின் அடிப்படை உரிமைக்கு எதிரான நீதிமன்ற உத்தரவை அதே நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தாமல் தடை விதித்து, தனது அரச விசுவாசத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளது. அவ்வளவே.

வேதனத்துக்காகப் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கு வேறு வழியில்லை. இத்தகைய பணமுதலைகளின் அட்டூழியத் தீர்மானங்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டேயாக வேண்டும்.

ஓர் ஊடகவியலாளனுக்குரிய நியாயமான கோபாவேசம் - நீதியான சீற்றம் - கொண்ட எவனும் இத்தகைய ஊடகங்களுக்குக் கழுவிக் கொடுத்துக் கொண்டிருக்க மாட்டான்.

என்ன செய்வது, பொருளாதார வழியற்ற நமது ஊடகவியலாளர்கள், நீதிவிரோதமான இத்தகைய ஊடகங்களுடன் ஒட்டிக் கொண்டிருப்பது அவர்களின் கட்டாயமாக இருக்கின்றது. பாவம் அவர்கள்...!

– மின்னல் –

## போராட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிக்கையின் பிரகாரம், திருக்கோவில் பிரதேசத்தில் போராட்டங்களை நடத்த அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் நேற்று தடை விதித்துள்ளது.

## இலங்கைக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான 30/1 தீர்மானம் குறித்த அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

முந்தைய நிர்வாகம் இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ள நிலையில் தற்போது இலங்கை பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கப்பட்ட போதிலும், இந்த நிபந்தனைகளுக்கு இணங்க இலங்கையின் அரசமைப்பில் ஏற்பாடுகள் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் பெப்ரவரி 22 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இதில் இலங்கை தூதுக்குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமை தாங்குவார்.

இந்த அமர்வு ஒரு மெய்நிகர் உச்சி மாநாடாக இருக்கக்கூடும். எனவே, சரியான நேரத்தில் போதுமான பிரதிநிதித்துவம் செய்யப்படும் - என்றார்.

## தமிழின அழிப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் பூர்வீக தாயகம். இது இலங்கை அரசாலும், அதன் படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதாலேயே அதைத் தடுக்கும் வகையிலும், எமது பூர்வீக தாயகத்தை நாமே ஆளும் வகையிலும் சுயநிர்ணய உரிமை கேட்டுப் போராடி வருகின்றோம். ஆரம்பத்தில் அறவழியிலும், அதன்பின்னர் ஆயுத வழியிலும், மீண்டும் ஜனநாயக வழியிலும் நாம் போராடி வருகின்றோம்.

ஆனால், தமிழர்களின் உரிமைப் போராட்டங்களை மதிக்காத இலங்கை அரசு, தமிழர்கள் மீதான அடக்குமுறைகளையும், இன அழிப்பு நடவடிக்கைகளையும் பகிரங்கமாக மேற்கொண்டு வருகின்றது.

தற்போதைய அரசின் நடவடிக்கைகள் மிகவும் மோசமானவையாக உள்ளன. விசேடமாக அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை வலுக்கட்டாயமாக நிறைவேற்றிய அரசு, வடக்கு, கிழக்கை இராணுவ மயமாக்கி வருகின்றது. பாரிய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான இராணுவ அதிகாரிகளுக்கும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கும் பதவி உயர்வுகளை வழங்கும் அரசு, அவர்களை முக்கிய பொறுப்புக்களில் நியமித்தும் வருகின்றது. சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தின் கையே தற்போது ஓங்கி வருகின்றது.

அத்துடன் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரை படையினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களைக் கொண்டு அச்சுறுத்தி வரும் அரசு, அவர்களின் சுதந்திரமான கடமைகளுக்குத் தொடர்ந்தும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றது.

பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து - சிறுபிள்ளைத்தனமான காரணங்களைக்கூறி வழக்குகளைத் தொடுத்து நீதிமன்றங்களைத் தவறாகப் பயன்படுத்தும் இந்த அரசு, நீதியான வகையில் நீதிமன்றங்கள் செயற்படுவதற்கு முட்டுக்கட்டையாகவும் இருந்து வருகின்றது.

தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டு அடையாளங்களை இந்த அரசு திட்டமிட்டு அழித்து வருகின்றது.

தமது கட்டுப்பாட்டில் இருக்கும் திணைக்களங்கள் ஊடாக வடக்கு, கிழக்கில் பௌத்த மயமாக்கல் திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு, கிழக்கில் பல இந்து ஆலயங்களைத் தொல்லியல் அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் ஆக்கிரமிக்கும் அரசு, அங்கு பௌத்த விகாரைகளை நிறுவுவதற்கும் முயற்சித்து வருகின்றது.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் காணிகளை அபகரிக்கும் அரசு, சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

முஸ்லிம் மக்களின் மத உரிமையில் கைவைத்துள்ள இந்த அரசு, கொரோனாவால் உயிரிழப்போரின் ஜனாஸாக்களை அம்மக்களின் விருப்பத்துக்கு மாறாக எரியூட்டி வருகின்றது. மத உரிமைக்காகப் போராடும் முஸ்லிம் சமூகத்தைப் பழிவாங்கும் அரசு, அவர்களை அடக்கி ஆள முனைகின்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பலரைக் கைதுசெய்த அரசு, அவர்களைத் தடுத்துவைத்துள்ளது.

பல வருடங்களாக சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆக்கபூர்வமான எந்தவித நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை.

தமக்கு விசுவாசமான குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ள அரசு, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கேட்டு பல வருடங்களாகப் போராடி வருகின்றனர். ஆனால், அவர்களுக்கான நீதியை வழங்காது அரசு ஏமாற்றி வருகின்றது.

ஆயிரம் ரூபா நாள் சம்பள உயர்வு கேட்டுப் போராடி வரும் மலையகத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்றாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

அரசின் இவ்விதமான நடவடிக்கைகள் நாட்டின் ஜனநாயகத்துக்கு உகந்தவையல்ல.

அரசின் கொடூரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம் நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரி முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்பேசும் உறவுகள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக்களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத்தின் மனச்சாட்சிகளைத் தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை பெரும் போராட்டமாக அஹிம்சை வழியில் முன்னெடுக்க வேண்டும் - என்றுள்ளது.

## மேலும் எழுவர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 330 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனா மரணப் பட்டியலில் இறுதியாகப் பதிவானவர்களின் விபரங்கள் வருமாறு:-

ராகமை பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஆண் ஒருவர், கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இவர் ராகமை வைத்தியசாலையில் வைத்தியராவார். இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி, உயிரிழந்த முதலாவது வைத்தியர் இவராவார்.

வத்தேகம பகுதியைச் சேர்ந்த 80 வயதான பெண் ஒருவர், பிம்புர மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கெலிஓய பகுதியைச் சேர்ந்த 77 வயதான ஆண் ஒருவர், பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - 02 ஐச் சேர்ந்த ஒன்றரை வயது (18 மாதங்கள்) ஆண் குழந்தை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளது.

நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 80 வயதான பெண் ஒருவர், பிம்புர மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

வெலிகம பகுதியைச் சேர்ந்த 67 வயதான பெண் ஒருவர், கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 29ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு - 15 ஐச் சேர்ந்த 82 வயதான பெண் ஒருவர், தனது வீட்டில் கடந்த 31ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

## ஒரு இலட்சத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தியாவால் 5 இலட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஏற்றும் நடவடிக்கைகள் கடந்த 28 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

## 65 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 65 ஆயிரத்து 698 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 59 ஆயிரத்து 43 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 325 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிறுபான்மையினருக்கு எதிரான அடக்கு முறையை எதிர்த்து சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்க கோரிக்கை!

## விடுத்தார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

இலங்கை சுதந்திரம் அடைந்தகாலம் தொட்டு இன்றுவரை தமிழ்த் தேசிய இனத்தை இல்லாமல் செய்யும் நோக்கில் செயற்படுகின்ற போக்கைக் கண்டித்தும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம் பளத்தோடு விளையாடும் போக்கைக் கண்டித்தும் இஸ்லாமியர்களின் மத நம் பிக்கைகளை அவமதிக்கும் போக்கைக் கண்டித்தும் இலங்கையின் சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்க அணிதிரளு மாறு தமிழ்த் தேசிய இனத்துக்கும் பெருந் தோட்ட பாட்டாளிகளுக்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் ஜனநாயக முற் போக்கு சக்திகளுக்கும் ஈழ மக்கள் புரட்சி கர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் பிரே மச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

1972 ஆம் ஆண்டு இலங்கை குடிய ரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த குடியரசு யாப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நாள் தமிழ் மக் களின் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்டது. தொடர்ந்தும் அது கரிநாளாகவே அனுஷ் டிக்கப்பட்டு வந்தது.

1978 ஆம் ஆண்டு மற்றொரு புதிய அரசியல் யாப்பை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அறிமுகப்படுத்தி னார். அதனையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இலங் கையின் சுதந்திர தினம் என்பது இலங்கை தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் கறுப்பு நாளாகவே இருந்து வந்துள்ளது.



நாளை 4 ஆம் திகதி 73 சுதந்திர தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில் தமிழ் மக்கள் தமது விடுதலைக்காக லட்சக்கணக்கில் தமது சொந்தபந்தங்களை இழந்தும் போராடி வருகின்றனர். இன்றும் அரசியல் உரிமை களுக்காகவும் காணாமல் ஆக்கப்பட் டோருக்காகவும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் போராடிக்கொண் டிருக்கிறார்கள்.

ஆனால், அரசாங்கமோ தமிழ் மக்க ளின் புராதனச் சின்னங்களை அழிப்பதி லும் அத்தகைய புராதனச் சின்னங்கள் உள்ள இடங்களில் புத்தர் சிலைகளை நிறுவுவதிலும் காணிகளை பலாத்கார மாக அபகரித்து சிங்கள மக்களைக் குடி யேற்றுவதிலும் வடக்கு – கிழக்கு இணைப்பை இல்லாதொழித்து அந்த நிலத் தொடர்ச்சியை இல்லாமல் செய்வதி லும் வேகமாகச் செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், சுதந் திர தினமென்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அது தமிழ் மக்களுக் கான சுதந்திர நாளல்ல. மாறாக, அது சிங்கள மக்களுக்கான சுதந்திரநாளே.

ஆகவே, அத்தகைய ஒரு நாளை தமிழ் மக்கள் ஒரு கறுப்பு நாளாகக் கருதி சுதந்திரத் தினத்தைப் புறக்கணிக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன் னணி வேண்டுகோள் விடுக்கின்றது.

அதே சமயம் அரசாங்கத்தினுடைய இத்தகைய எதேச்சாதிகார நடவடிக்கை களுக்கு எதிராகவும் தமிழ் மக்கள்மீது திணிக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கைகளுக்கு எதிராக அவர்களது ஜனாஸாக்களை எரித்துவரும் அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் மலை யக உழைக்கும் வர்க்க தமிழ் மக்களுக்கு ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் வழங் கப்படும் எனக்கூறி இதுவரை அதனை நடைமுறைப்படுத்த பின்நிற்கும் அர சாங்கத்திடம் அதனை நடைமுறைப் படுத்தும்படி கோரியும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை அரசிற்கு எதிராகச் செயற்படுத்தப்படும் போராட்டங்களில் முழு மக்களையும் கலந்துகொள்ளுமா றும் அதனூடாக எமது எதிர்ப்பை அரசாங் கத்துக்குத் தெரியப்படுத்துமாறும் அனைத்து தமிழ் முஸ்லிம் மக்களையும் ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் கோருகின்றோம். – என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

# ஜனவரியில் 20 ஆயிரம் தொற்றாளர் நாட்டுக்கு சிறந்த அறிகுறி அல்லவாம்!

## என்கின்றது அரச மருத்துவர் சங்கம்

2021ஆம் ஆண்டு 2020 ஐ விட மோசமானதாக அமையும் என்பவற்றுக்கான அறிகுறியாக ஜனவரி மாதத்தில் மாத்திரம் சுமார் 20 ஆயிரம் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதே நிலைமை தொடருமாயின் 2021 ஆம் ஆண்டும் மோசமானதாகவே அமையும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

எனினும் நாட்டில் தற்போது கொவிட் தடுப்பூசி வழங்கும் செய்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட ஒருவருக்கு தொற்று ஏற்பட்டாலும் கூட அவரிடமிருந்து ஏனையோருக்கு வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு என்பதோடு, மரணங்களின் எண்ணிக்கையும் பெரி யளவில் குறைவடையும் என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத் தியர் ஹரித அலுத்கே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

வைரஸ் தொற்று மேலும் வேகமாகப் பரவாதி ருப்பதற்கு பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்பதோடு 7 – 8 மணித்தி யாலங்களில் அதன் முடிவுகள் கிடைப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ் வாறில்லை என்றால் தொற்றுப் பரவல் வேகமாக அதிகரிக்கக் கூடும்.

நாட்டில் தற்போது சுமார் 40 ஆயிரத்துக்கும் அதி கமான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து 22 ஆயிரத்துக்கும் அதிகமான நபர் கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் தொடர்பில் விஷேட கண்காணிப்பு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபரை வைத்திய சாலையில் அனுமதிப்பதற்கு 3 – 4 நாள்கள் கால தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலைமை மாற்றமடைய வேண்டும்.

ஜனவரியில் மாத்திரம் 20 ஆயிரம் தொற்றா ளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது நாளொன்றுக்கு சுமார் 800 தொற்றாளர்கள் இனங் காணப்படும் நிலை தொடருமாயின் பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் 25,000 – 30,000 தொற்றாளர் கள் இனங்காணப்படக் கூடும். இதே நிலைமை தொடருமாயின் 2020 ஐ விட 2021 மிக மோசமா னதாக மாறிவிடும்.

எனினும் தற்போது தடுப்பூசி வழங்கும் செயற் பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ள ஒருவருக்கு வைரஸ் தொற்று ஏற்படுமாயின் அது பாரிய அச்சுறுத்தலாக அமை யாது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவர்களிடமிருந்து வைரஸ் ஏனையோருக்கு பரவும் வீதமும் மரணங்கள் எண்ணிக்கையும் குறை வாகும். எனவே, சரியான முறையில் தடுப்பூசி வழங் கும் செயற்றிட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படு மாயின் 2020 ஐ விடவும் 2021 ஐ சிறப்பான வருட மாக மாற்றியமைக்க முடியும். – என்றார்.

# ஒரு பொதுமக்கள் பாதுகாப்புக் குழு ஒவ்வொரு கிராமத்துக்கும் அமைப்பு!

## அரசாங்கம் தீர்மானம்



ஒவ்வொரு கிராமத்தை யும் உள்ளடக்கும் வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு குழுக்களை அமைக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர இதனைத் தெரி வித்துள்ளார்.

கிராமங்களில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு சமூக முறைகேடு களைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இந்த திட்டம் கொழும்பு மாவட்டத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தென் மாகாண ஆளுநர் விலி கமகேவுக்கு தொற்று!

தென் மாகாண ஆளுநர் பேராசிரியர் விலி கமகேவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

அவருடைய தனிப்பட்ட செயலாளருக்கு இதற்கு முன்னர் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டி ருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைப் பெண்களின் வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்குகின்றது அமெரிக்கா!

இலங்கைப் பெண்களுக்கு உதவும் முகமாக இலங் கையின் சனச அபிவிருத்தி வங்கிக்கு 4 கோடி அமெ ரிக்க டொலர் கடனுதவியை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் உள்ள அமெ ரிக்கத் தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டு இத னைத் தெரிவித்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கும் பெண் தொழில்முனைவோருக்கும் உதவுவதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி வங்கியான அமெரிக்கா சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத் திடம் இருந்து பெறப்படும் இந்த கடனுதவி, இலங்கை யில் தனியார்துறை முதலீடு மற்றும் பொருளாதார வளர்ச் சிக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# காணாமலானோர் உறவுகளது சுழற்சி முறை உணவுத் தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பம்!



வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளது சுழற்சிமுறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று (செவ்வாய்க் கிழமை) ஆரம்பமாகியுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன் பாக நேற்றுக் காலை 11 மணியளவில் ஆரம் பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் கவனயீர்ப்புப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து போராட்ட பந்தல் அமைக்கப்பட்டு இடத்தில் அறவழி போராட் டத்தை அவர்கள் ஆரம்பித்தனர்.

இந்த நிலையில், சுழற்சி முறையிலான இந்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் 6 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் கிளிநொச்சி மற்றும் வவு னியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவுகள் கலந்து கொண்டனர்.

இதன்போது தமது பிள்ளைகளை விடுதலை செய்ய வேண்டும் என உறவுகள் வலியுறுத்திய மையுடன், சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

காலைக்கதிர்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதித்துறையின் சீத்துவம்

தீர்வுக்காகவும், நீதிக்காகவும் தமிழர்கள் ஜனநாயக வழியில் போராடினால் அந்தப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்தக் கூடாது. தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வையும் பல்வேறு இன்னல்களினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியையும் வழங்குவது ஆட்சியாளர்களின் கடமையாகும். அப்போதுதான் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்." – இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்.பி. கூறியிருக்கின்றார்.

– இப்படித் தெரிவிப்பதற்கான உரிமை – தகைமை – முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்டு என்பதை நாம் ஏற்று அங்கீகரித்துத்தானாக வேண்டும். அவர் தாமே உரிமை கோருகின்றபடி அவரது ஆட்சியில் தமிழர்களின் மனதை ஆட்சித்தரப்பு வென்றிருந்தது என்பதும் முற்றிலும் உண்மை.

ஆனால், தமிழர்கள் உட்பட அனைத்துச் சிறுபான்மையினரும் ஒன்றுபட்டு வாக்களித்து – ராஜபக்ஷக்களை வீழ்த்தி – மைத்திரிபால சிறிசேனவை ஆட்சி அதிகாரத்துக்குக் கொண்டு வந்தமைக்கு சரியான பிரதியுபகாரத்தை அவர் சிறுபான்மையினருக்குச் செய்யவில்லை என்பதுதான் தமிழர் தரப்பின் பெரும் ஆதங்கம்.

அவரது, ஆட்சியின் கீழ் தமிழர்கள் தங்கள் ஆதங்கத்தை – அங்கலாய்ப்பை – எதிர்பார்ப்பை – வேணவாவை – அபிலாஷைகளை – சட்ட ரீதியான முறையில் வெளிப்படுத்துவதற்கான இடைவெளி இருந்தது. தமிழ் மக்கள் தமது கருத்தியலை வெளிப்படுத்துதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

ஆனாலும், அவை எல்லாவற்றையும் தாண்டி, நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு – இனச்சிக்கலுக்கு – இணக்கமான நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அற்புதமான வாய்ப்பும், அரிய சந்தர்ப்பமும் அவருக்குத்தான் கிட்டின. இந்த நாட்டின் இருபெரும் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைத்து, ஓர் அரசை அமைத்து, அதற்குத் தலைமை தாங்கும் – முன்பின் இல்லாத சரித்திர வாய்ப்பு அவருக்கு மட்டுமே கிட்டியது. அந்த அற்புத சந்தர்ப்பத்தை தம்முடைய தனிப்பட்ட அரசியல் வேறுபாடுகளை – முட்டி மோதல்களை – முன்னிறுத்தி, கெடுத்துக் குட்டிச் சுவராக்கியவர் அவர்தான்.

நாட்டின் பௌத்த, சிங்கள பேரினவாத சக்திகள் எல்லாம் வாயடைக்கப்பட்டு, ஒட்டி நறுக்கப்பட்டு, முடக்கப்பட்டிருந்த அந்தச் சமயத்தில் நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை எட்டுவதற்கான வாய்ப்பு திறந்து கிடந்தது. இடைஞ்சல்கள் நீக்கப்பட்டிருந்தன. முட்டுக்கட்டைகள் அகற்றப்பட்டிருந்தன.

அப்போதுஅந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்ட – அல்லது இழக்க – இடமளித்து செயலாற்றியிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இப்போது புத்திதெளிந்து நீலிக் கண்ணீர் வடிக்கின்றார். அப்போது இருந்த அதிகாரச் செருக்கு, தீர்வு குறித்து சரிவர சிந்திக்க அவருக்கு இடமளிக்கவில்லை.

இப்போது அதிகாரத்தை இழந்து, வேறு வேலையின்றி, ஈ ஓட்டும் போது இந்தத் தத்துவம் – நியாயம் – எல்லாம் அவருக்குப் புரிகின்றது.

அதுவும், நான்கரை ஆண்டு கால நிறைவேற்று அதிகாரம் தமது கையை விட்டுப் போகும் போது, அதற்குப் பின்னர் அரசியலில் தாம் பிழைத்துக் கொள்வதற்காக, பௌத்த, சிங்களப் பேரின வாதத்தைக் கிளப்பிய மேலாண்மை போக்கு இனவெறியர்களுக்கு ஆதரவு அளித்து, அவர்களை அதிகாரத்துக்கு ஏற்றி விட்டு, விட்டு இப்போது அவர் முதலைக் கண்ணீர் வடிப்பது ஏற்புடையதன்று, அர்த்தமற்றது.

தங்களது அரசியல் உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் – தார்மீக முறைகளில் – அறவழியில் – காந்தீயப் பாதையில் – தமிழர்கள் போராடவும் இடமளிக்காமல், பொலிஸ் துறை மூலம் சட்டத்தை வளைத்து தடை விதிக்கின்றது ராஜபக்ஷக்களின் கொடூர அரசு.

அறவழியில் தமிழர்கள் போராடுவதற்கான கதவை அடைப்பதன் மூலம், இதுவரை – கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் வரை – தமிழர்கள் நடத்திய மறவழிப் போராட்டத்துக்கு நியாயம் கற்பிக்கின்றது சிங்கள அரசு.

அஹிம்சை வழியில் கூட தமது கருத்தியலை வெளிப்படுத்தக் கூட இடமளிக்காமல் சட்டத்தின் பெயரால் வாயடைத்துத் தடை விதிக்கும் மிக மோசமான நீதித்துறைக் கட்டமைப்பே இந்த நாட்டில் நடைமுறையில் உள்ளது என்பதை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து நீதி விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசின் நீதித்துறை – சட்டமுறைமை – பொருத்தமேயற்றது, பக்கச்சார்பானது, நியாயமாகச் செயற்படாதது எனத் தமிழர்கள் திரும்பத் திரும்பக் கூறுவதை நியாயப்படுத்தும் விதத்தில் தமிழர்களின் அறவழிப் போராட்டங்களுக்கு எதிராகப் – பொலிஸாரின் பரிந்துரைகளுக்கு அமைவாக – இலங்கை நீதிமன்றங்கள் விடுத்துவரும் கட்டளைகள் நல்ல ஆதாரங்கள், சான்றுகளாக அமைகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# தனித் தமிழ் ஈழம் அமைத்திட பொது வாக்கெடுப்பு வேண்டும்

## உலகத் தலைவர்களிடம் வைகோ கோரிக்கை



தனித் தமிழ் ஈழம் அமைத்திட பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உலக தலைவர்களுக்கு தி.மு.கழகத்தின் சார்பில், பொதுச் செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், இந்த விடயம் தொடர்பாக அவர், நூற்றுக்கும் மேற்பட்ட மின் அஞ்சல் கடிதங்களை அனுப்பி உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள், ஐ.நா. மன்றப் பொதுச்செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத் தலைவர், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தலைவர், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்ட பல நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்புகளுக்கு அவர் இவ்வாறு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள அவர் - '2009 ஆம் ஆண்டு நோர்வே - பிரான்ஸ், கனடா, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர்ந்து வந்த இலங்கைத் தமிழர்கள் இடையே ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தமிழ் ஈழம் அமைவதற்கு அவர்கள் பெரும் ஆதரவு அளித்தனர்.

2011 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி இந்தியாவின் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம், ஐ.நா. அறிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது.

விடுதலைப் புலிகள் உட்பட இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், அனைத்துக்கும் மேலாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாநிலங்களைப் பிரித்து தனித்தமிழ் அமைப்பதற்கு ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் பொது வாக்குப்பதிவு நடத்த வேண்டும் எனத் தமிழ் நாடு சட்டமன்றத் தீர்மானம் கோருகின்றது.

இலங்கை வடக்கு மாகாண மன்றம், 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்.

சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் தமிழர் தாயகப் பகுதிகளில் இருந்து சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் அனைவரையும் வெளியேற்ற வேண்டும் என அந்தத் தீர்மானம் கோருகின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் ஒரு பொது வாக்குப்பதிவு நடத்த வேண்டும் என்று அந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

எனவே ஐ.நா. மனித உரிமைகள் மன்றம் மற்றும் ஐ.நாவின் அனைத்து உறுப்பு நாடுகளும் சேர்ந்து கீழ்காணும் கோரிக்கைகளை ஆய்வு செய்து தீர்வு காண வேண்டும் என நாங்கள் கோருகின்றோம்.

1. ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையை ஏற்க வேண்டும், ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

2. 2015 பெப்ரவரி 10 ஆம் திகதி இலங்கை வடக்கு மாகாண மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்க வேண்டும்.

3. இலங்கை அரசு நடத்துகின்ற எந்த விசாரணையின் மீதும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றம் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

4. இந்திய அரசு, மனித உரிமைகள் மன்ற உறுப்பு நாடுகளை ஒருங்கிணைத்து நிகழ்ச்சி நிரல் 4 இன்படி சிறப்பு ஆணையர் ஒருவரைத் தெரிவு செய்து, இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்கள், தமிழர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைக் கண்காணிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

05. இலங்கையில் நடைபெறுகின்ற மனித உரிமைமீறல்களைக்கண்காணித்து, உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

06. தொடர்புடைய உறுப்பினர்களுடன் இலங்கைக்கு நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும்.

07. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. பொதுப்பேரவைக்கும் மனித உரிமைகள் மன்றத்துக்கும் ஆய்வு அறிக்கை வழங்கவேண்டும்.

08. பிரச்சினைகளை உடனுக்குடன் வெளிக்கொணர வேண்டும். அதிகாரபூர்வ செய்தி அறிக்கைகளை வெளியிட வேண்டும்.

09. இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை விடுவித்து நீதி வழங்க வேண்டும். –என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தனி இராச்சியம் அமைக்க முனைந்தால் கைது செய்யப்படுவர் என எச்சரிக்கை!

## கிளிநொச்சி போராட்டம் குறித்து பொலிஸ்

அரசாங்கத்துக்கு எதிராக புரட்சி செய்வார்களாயின் - தனி இராச்சியம் அமைக்க முயற்சிப்பார்களாயின் - அத்தகைய நபர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யுமாறு கோரி கிளிநொச்சியில் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில், இது தொடர்பாக நேற்று (செவ்வாய்க் கிழமை) கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருக்கும் தமது உறவினர்களை உடனடியாக விடுவிக்குமாறு கோரி கிளிநொச்சி - ஏ9 வீதியில் கடந்த திங்கட்கிழமை 23 பேர் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்துள்ள அவர், அவர்களால் விடுதலை செய்யப்பட வேண்டும் என கோருபவர்கள் பொலிஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள உருவாக்க முயன்ற குற்றத்திற்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வெடிபொருள்கள்மற்றும்டெட்டனேட்டர் உள்ளிட்டவையும் கைப்பற்றப்பட்டன எனவும் அவர் கூறினார்.

அரசாங்கத்துக்கு எதிராக புரட்சி செய்வார்களாயின், தனி இராச்சியம் அமைக்க முயற்சிப்பார்களாயின் அத்தகையநபர்களைகைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் காரணமின்றி அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்ற கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

# VACANCIES

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

## FACULTY OF SCIENCE

Senior Professor/ Professor of Computer Science/Chemistry/Mathematics and Statistics/ Physics/ Botany

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II /Lecturer (Unconfirmed) / Lecturer (Probationary) in Chemistry/Physics/Fisheries/Mathematics and Statistics/**Computer Science

Note 1:

**- Preference will be given

1. To the Candidates those who obtained special degree in Computer Science/ Computer Engineering / Information Systems/ Software Engineering from a Higher Education Institution recognized by the UGC.
2. To those who have strong background /experience in Pure Mathematics/Statistics/Bioinformatics/ Cyber Security/Internet of Things

**Remuneration:**

| Posts | Salary scales |
|---|---|
| Senior Professor | Rs.139,175 - 11 x 2,925- 171,350/-p.m |
| Professor | Rs.117,350-13 x 2,700-152,450/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.91,310-7 x 2,170-106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11 x 1,630-97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730/-p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary:

**i) Academic allowance**

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
| Lecturer (Unconfirmed) | - 131% |
| Lecturer (Probationary) | - 115% |

**ii) Research allowance** - 35% (Payable to the Academic Staff based on the research activity)

**iii) Additional monthly allowance** – 20%

**iv) Cost of living allowance** of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

- Sabbatical leave entitlement as per the existing UGC Circulars
- Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
- Gratuity payments
- Employees' Trust Fund benefits
- Free Medical Services

Those who wish to apply are strongly advised to visit our University Website www.jfn.ac.lk for all the relevant details.

**Closing date:**

Applications should reach us on or before the date given below:

| | |
|---|---|
| Post of Senior Professor/Professor | - 05.04.2021 |
| Other posts | - 03.03.2021 |

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account **No: 162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

The candidates who apply for more than one post should submit **separate application** along with separate Bank slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self-evaluation with supportive documents for the **Post of Senior Professor/Professor** shall be sent to the **Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka** as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www.jfn.ac.lk/index.php/circular/) with a covering letter.

Perfected applications for the other posts shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna**, Sri Lanka under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Applications and referees reports should be in the relevant format. Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
02.02.2021

# கொரோனா வைரஸ் தாக்கம் இனி கல்வித் துறைக்குத் தடையாகாது!

## அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை



கொரோனாத் தாக்கம் இனி கல்வித்துறைக்கு ஒரு தடையாக அமையாது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'சிறந்த திட்டமிடலுக்கு அமைய முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களின் கற்றல் நடவடிக்கைகள் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது.

மேல்மாகாணத்தில் களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் அனைத்துத் தரங்களுக்குமான கற்றல் நடவடிக்கைகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்க முடியும் என பிரதேச தொடர்பு குழுவினர் யோசனை முன்வைத்துள்ளார்கள்.

களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டம் தொடர்பாகப் பிரதேச தொடர்பு குழுவினர் முன்வைத்துள்ள யோசனைகளை சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவித்துள்ளோம்.

பாடசாலைகளை எதிர்வரும் 15ஆம் திகதி திறக்க சுகாதாரப் சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்குவார் என எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்களுக்கும், பாடசாலை வெளிக்கள சேவையாளர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசியை வழங்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாதத்தின் நடுப்பகுதியில் பாடசாலை சேவையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தடுப் பூசிகளை வழங்க எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் கல்வித்துறைக்கு ஏற்படுத்திய சவால்களை சிறந்த முறையில் வெற்றிக் கொண்டுள்ளோம்.

கொரோனா தாக்கம் இனி கல்வித்துறைக்கு ஒருதடையாக அமையாது. அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் ஆசிரிய சங்கம், சிவில் அமைப்புக்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தற்போது பொய்யாக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்டப்படி 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுதராதரசாதரண தரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தப்படும். இடம்பெற்று முடிந்த உயர்தரப் பரீட்சைக்கான பெறுபேறு ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படும்.

சாதாரண தரப் பரீட்சைக்கான பெறுபேற்றை ஜூன் மாதம் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 97 நிலையங்களில் 8,088 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்!

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 97 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 8 ஆயிரத்து 88 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று (செவ்வாய்கிழமை) காலை 6 மணி வரையான 24 மணித்தியாலங்களில் 916 பேர் குணமடைந்து வைத்தியசாலை மற்றும் சிகிக்சை நிலையங்களில் இருந்து வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள 6 ஆயிரத்து 585 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55ஆவது மாநாடு இலங்கையில்!

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55 ஆவது வருடாந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு வங்கியின் நிர்வாகசபை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை இந்த மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது.

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# தமிழரின் மரபுரிமைச் சின்னங்களின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடல்!

## யாழ். மாநகர முதல்வர் தொல்பொருள் திணைக்களத்தினருடன் ஆராய்வு





யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட இடங்களிலுள்ள தமிழர்களின் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக யாழ். மாநகர முதல்வருக்கும் தொல்பொருள் திணைக்களத்துக்கும் இடையில் முக்கிய கலந்துரையடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது, தமது வரலாறுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவதற்கு ஏதுவான வகையிலும் தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள மரபுரிமைச் சின்னங்களைத் தாமே பாதுகாக்கும் நோக்குடனும் மரபுரிமைச்சின்னங்களை பாதுகாக்கின்ற பராமரிக்கின்ற பொறுப்பைத் தமக்கு வழங்கவேண்டும் என்று முதல்வர் தொல்பொருள் திணைக்களத்தினரிடம் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் இந்த மரபுரிமைச் சின்னங்களை முழுமையாகக் கையளிக்காதுவிடினும் ஒப்பந்த அடிப்படையில் மரபுரிமைச் சினைங்களைப் பாதுகாக்கின்ற உரிமையை மாநகர சபைக்கு வழங்குமாறும் முதல்வர் கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த தொல்பொருள் திணைக்கள அதிகாரி இது தொடர்பாக கோரிக்கை கடிதம் ஒன்றைத் தருமாறும் அதற்குரிய அனுமதிக்கு முயற்சிப்பதாகவும் கூறினார்.

முக்கியமாக சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோப்பு மற்றும் வளைவு, யமுனா ஏரி ஆகிய தமிழர் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாத்து பாராமரிப்பது தொடர்பாக யாழ். மாநகர சபையும் தொல்பொருள் திணைக்களமும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருகின்றமை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் குறித்த இடங்களில் அந்த மரபுரிமைச் சின்னங்களின் வரலாற்றை மூன்று மொழிகளிலும் இடுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டு முடிவுசெய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலுக்கு பின்னர் தொல்பொருள் திணைக்கள அதிகாரி மற்றும் மாநகர முதல்வர் தலைமையிலான குழுவினர் யாழ். கோட்டை, யமுனா ஏரி, சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோப்பு ஆகிய இடங்களை நேரில் பார்வையிட்டு எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். கோட்டைப் பகுதியைச் சுற்றிய வெளிப்பகுதி குறிப்பாக முத்தவெளி பகுதியில் வளர்ந்திருக்கின்ற செடிகள் மற்றும் புற்களை அகற்றி அந்தப் பகுதியை யாழ். மாநகர சபையும் தொல்பொருள் திணைக்களமும் இணைந்து தூய்மைப்படுத்துவது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

## முகக்கவசம் அணியத் தவறிய 14 பேர் பொலிஸாரால் கைது

*முகக்கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்*

*கடந்த 24 மணி நேரத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.*

*கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 2 ஆயிரத்து 944 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அஜித் றோஹண மேலும் தெரிவித்துள்ளார்.*

## உயர்நீதிமன்றில் பிரேரணை தாக்கல் செய்தார் ரஞ்சன்!

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, தனது குற்றச்சாட்டு தொடர்பாக உயர் நீதிமன்றல் பிரேரணை தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யுமாறு கோரியே அவர் உயர் நீதிமன்றில் தனது வழக்கறிஞர் மூலமாக இந்தப் பிரேரணையைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அலரி மாளிகைக்கு அருகில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போது, பெரும்பான்மையான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல்வாதிகள் என வெளியிட்ட கருத்துகளினூடாக நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டார் என ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி வழக்குத் தொடுநர் சட்டமா அதிபர் தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளமையால், குற்றவாளியாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை அறிவித்து அவருக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனையை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்தினருக்கும் ஆயுதக் குழு ஒன்றுக்கும் இடையில் வவுனியாவில் துப்பாக்கிப் பிரயோகம்!

வவுனியா செட்டிகுளம் வனப் பகுதியில் இராணுவத்துக்கும், ஆயுதங்களுடன் இருந்த குழுவொன்றுக்கும் இடையில் பரஸ்பர துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த பகுதியில் ஆயுதங்களுடன் இருந்த மூவர், இராணுவத்தை இலக்கு வைத்துதுப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வில்பத்து வனப் பகுதியில் கடமைகளுக்காக சென்ற இராணுவத்தின் மீதே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த 20 வயதான செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு கோரிக்கையை நுகர்வோர் விவகார அதிகார சபை நிராகரித்தது

*சமையல் எரிவாயு கொள்கலனின் விலையை அதிகரிக்குமாறு சமையல் எரிவாயு நிறுவனம் ஒன்று முன்வைத்த கோரிக்கையை நுகர்வோர் விவகார அதிகார சபை நிராகரித்துள்ளது.*

*12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை தற்போது ஆயிரத்து 493 ரூபாவாக காணப்படுகின்ற நிலையில் அதனை ஆயிரத்து 900 ரூபாவாக அதிகரிக்குமாறு அந்த நிறுவனம் கோரியிருந்தது.*

*உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டி இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.*

*எனினும் அது தொடர்பாக விலைகள் தொடர்பான விவரங்களை அந்த நிறுவனம் வழங்காமை காரணமாக விலை அதிகரிப்புக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

## கொரோனா செயலணியின் பிரதானிகள் காலம் கடத்துவதே ஜனாஸா விவகாரத்தில் சர்வதேசத் தலையீட்டுக்கு காரணம்!

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை எரிப்பதா அல்லது புதைப்பதா என்பதற்கு கொவிட் – 19 செயலணி பிரதானிகள் உறுதியான தீர்மானம் ஒன்றை அறிவிக்காது காலத்தைக் கடத்துவதே சர்வதேச தலையீடுகள் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

இந்த விடயத்தில் அரசியல், மத, இன ரீதியில் தீர்மானம் எடுப்பதை விடவும் சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் கொவிட் – 19 வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை நல்லடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என சிவில் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்ற நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் இதனை வலியுறுத்தியுள்ள நிலையில், இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ஹரித ஹேரத் கூறுகையில் –

கொவிட் – 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் சுகாதார நடவடிக்கைகளை கையாள நியமிக்கப்பட்டுள்ள செயலணியின் அதிகாரிகள் தீர்மானங்களை எடுப்பதில் பாரிய பின்னடைவுகள் உள்ளமையை நாம் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றோம்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு மாறுபட்ட கருத்துக்களை முன்வைப்பதன் மூலமாகவே இந்த நிலைமை உருவாகக் காரணமாகியுள்ளது.

இந்த விடயங்களில் நாட்டுக்குள்ளேயே தீர்வுகளை எடுக்க வாய்ப்புகள் இருந்தும் மத விடயங்கள், சுகாதார வழிமுறைகள் எனக் கூறிக்கொண்டு சர்வதேச தலையீடுகள், கருத்துக்களைக் கேட்க வேண்டிய நிலைமை உருவாக்கியுள்ளது என்றால் அதற்கு நாம் சரியான தீர்மானம் எடுக்க முடியாது போனமையே காரணமாகும்.

முஸ்லிம் உடல்களை நல்லடக்கம் செய்வதா அல்லது எரிப்பதா என்பதை ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அப்போதில் இருந்தே முரண்பாடுகள் எழ ஆரம்பித்துவிட்டன.

உறுப்பினர்கள்கூட வெவ்வேறு மாறுபட்ட தீர்மானங்களை அறிவித்தமையே சர்வதேச தலையீடுகள் ஏற்படவும் காரணமாக அமைந்துவிட்டது.

எனவே, இப்போதாவது அரசாங்கம் உறுதியான தீர்மானம் ஒன்றை அறிவிக்க வேண்டும். அரசியல் தீர்மானமாகவோ, மத, இன அடிப்படையிலான தீர்மானமாகவோ அது அமையக் கூடாது. – என்று தெரிவித்தார்.

## மக்கள் சக்தியின் பிரதி செயலராக வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டார்!



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பதவிகளுக்காக அண்மையில் கட்சியின் முக்கியஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் கட்சியின் பிரதி செயலாளர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# நீதியை நிலைநாட்டும் வலுவானதொரு தீர்மானம் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் வேண்டும்!

## மனித உரிமை கண்காணிப்பக பணிப்பாளர் ஜோன் ஃபிஷெர் வலியுறுத்தல்

இலங்கையின் அரசாங்கம் கடந்த காலத்தில் கடுமையான துஷ்பிரயோகங்கள் செய்த அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை உக்கிரமாக எதிர்த்து தடுத்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமர்வில், இலங்கையில் கடுமையான சர்வதேச குற்றங்களுக்கு நீதியை நிலைநாட்டும் தீர்மானத்தை நிறைவேற்றுவதுடன் தொடர்ச்சியான துஷ்பிரயோகங்கள் கண்டிக்கப்பட வேண்டும் என ஜெனிவாவிற்கான மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளர் ஜோன் ஃபிஷெர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை அரசாங்கத்தின் நீதி மீதான தாக்குதல் இன்றும் எதிர்காலத்திலும் மனித உரிமை மீறல்களின் அபாயத்தை அதிகரிக்கிறது, 'ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

2020 ஆம் ஆண்டில் பொறுப்புக்கூறலை வழங்குவதற்கான முயற்சிகள் கணிசமாகக் குறைந்துவிட்டன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தின் போது நடந்த கொலைகள் மற்றும் வலிந்து காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரிக்கும் மூத்த காவல்துறை அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அல்லது வெளிப்படையாக இட்டுக்கட்டப்பட்ட குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணையகம் அவரது நண்பர்களின் மற்றும் ஆதரவாளர்கள் சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகளில் தலையிட முயன்றுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ மற்றும் உளவுத்துறை அதிகாரிகளின் சோதனைகள் தாமதமாகி சீர்குலைக்கப்பட்டுள்ளன.

ராஜபக்ஷ ஆதிக்கம் கொண்ட நாடாளுமன்றம் அரசமைப்பில் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியது, இது ஜனாதிபதி அதிகாரத்தின் முக்கிய கட்டுப்பாடுகளை இரத்து செய்து, நீதித்துறை மற்றும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணையகம் போன்ற நிறுவனங்களின் சுதந்திரத்தைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது.

2009 இல் முடிவடைந்த இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது அரசாங்க பாதுகாப்புப் படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் நடத்திய அட்டூழியங்களை ஐ.நா. சபை, பொது ஊடகங்கள் மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் நன்கு ஆவணப்படுத்தியுள்ளன.

இந்த நடவடிக்கையில் மனித உரிமைகள் கண்காணிப்பகமும் அடங்கியுள்ளது. ஐ.நாவின் உள்ளக அறிக்கையில் யுத்தத்தின் இறுதி மாதங்களில் பொது மக்களைப் பாதுகாக்க உதவும் ஐ.நாவின் முறையான தோல்விகளை அம்பலப்படுத்தியது.

2005 மற்றும் 2015 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கண்மூடித்தனமான தாக்குதல்கள், சுருக்கமான மரணதண்டனைகள் மற்றும் கற்பழிப்பு உள்ளிட்ட ஏராளமான போர்க்குற்றங்கள் பதிவாகியுள்ளன.

நவம்பர் 2019 இல் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையிலிருந்து, போர்க் குற்றங்கள் மற்றும் பிற கடுமையான மீறல்களில் சிக்கியுள்ளவர்களை மூத்த நிர்வாக பதவிகளுக்கு நியமித்துள்ளார்.

நாட்டின் 'போர்வீரர்கள்' மீதான தாக்குதலாக அறிவித்து, மனித உரிமைகள் பேரவையின் 2015 ஆம் ஆண்டின் தீர்மானத்தின் கீழ் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளைத் தவிர்த்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான இலங்கையின் கடமைகளை அவர் மறுத்தார். துஷ்பிரயோகத்துக்கு தண்டனை பெற்ற மிகச் சில வீரர்களில் ஒருவரை அவர் மன்னித்தார்.

2015 - 2019 வரை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அரசாங்கத்தின் போது, மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல பொலிஸ் விசாரணைகள் முன்னேற்றம் கண்டன.

இவை கொலைகள் மற்றும் வலிந்து காணாமல் போனவர்களுக்குரிய உத்தியோகபூர்வ பொறுப்புக்கான ஆதாரங்களை வெளிப்படுத்தின. எவ்வாறாயினும் 2009 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை உட்பட 2010இல் பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார். 2008 - 2009 இல் இளைஞர்கள் கடற்படை புலனாய்வு அதிகாரிகளால், பணம் அறவிடுவதற்காகக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற முக்கியமான விசாரணைகள் தற்போது கைவிடப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு திருகோணமலை படுகொலை, அதில் ஐந்து தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டனர், மற்றும் ஒரு பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் 17 உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பிற முக்கிய விசாரணைகளிலும் எந்த முன்னேற்றமும் இல்லை.

மீண்டும் சுய தணிக்கை இலங்கை ஊடகங்களுக்குத் திரும்பியுள்ளது, அதே நேரத்தில், காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்றறியப் போராடும், பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீது கடுமையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்களை மேற்கொண்டுள்ளனர். அச்சத்தின் காரணமாக மக்கள் சுய தணிக்கை நிலைமைக்குச் சென்றுள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்டவர்களின் பல குடும்பங்கள் அரசாங்கத்தின் விரோதப் போக்கை எதிர்கொண்டு மனித உரிமைகளுக்கான மரியாதையை நிலைநிறுத்த மனித உரிமைகள் பேரவையை நோக்கித் திரும்பியுள்ளன. 2020 ஆம் ஆண்டில், ஜெனிவாவில் ஐ.நா. செயற்பாட்டில் ஈடுபடும் ஆர்வலர்களை அரசாங்கம் துன்புறுத்தியது.

ஜனவரி 21 ஆம் திகதி ஜனாதிபதி மற்றுமொரு புதிய உள்நாட்டு விசாரணை ஆணையகத்தை அறிவித்தார், இது முந்தைய பல விசாரணை ஆணையகங்களின் கண்டுபிடிப்புகளை மறு ஆய்வு செய்யவென நியமித்தார். அவை பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கவில்லை அல்லது காணாமல் போனவர்களின் தலைவிதியை வெளிப்படுத்தவில்லை.

இந்த செயல்முறையின் முடிவை அரசாங்கம் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது, அதாவது, செப்ரெம்பர் மாதம் மனித உரிமைகள் பேரவையில் மூத்த இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் 'ஏற்றுக்கொள்ள முடியாதவை' மற்றும் 'கணிசமான ஆதாரங்கள்' இல்லை என்று அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சர்வதேச அழுத்தத்தைத் திசைதிருப்ப முந்தைய இலங்கை அரசாங்கங்கள் விசாரணை ஆணைக்குழுக்களைப் பயன்படுத்தின, அந்த ஆணைக் குழுக்கள் ஒருபோதும் அடிப்படை சர்வதேச தரங்களைப் பூர்த்தி செய்யவில்லை. இந்த தந்திரோபாயத்தை ராஜபக்ஷ அரசாங்கம் பயன்படுத்துவதால் மனித உரிமைகள் பேரவை உறுப்பினர்கள் திசை திருப்ப முயற்சிக்க கூடாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் பல ஆண்டுகால தட்டிக்கழிக்கும் வகையிலான தாமதத்தையும், முன்னறிவிப்பு மற்றும் எதிர்ப்பையும் ஏற்கெனவே எடுத்துள்ள நடவடிக்கைகளையும் கருத்திற்கொண்டு புதிதாகவும் வலுவாகவும் கட்டமைக்க வேண்டும்.

சபை உறுப்பினர்கள் மிக மோசமான சர்வதேசக் குற்றங்களுக்கான சர்வதேச சட்டத்தின் கோட்பாடுகளை ஆதரிக்க வேண்டும், அதிகாரம் வழங்கப்பட்ட ஐ.நா. பொறிமுறையையோ அல்லது செயல்முறை ஒன்றின் ஊடாக ஆதாரங்களைச் சேகரிக்கவும், பாதுகாக்கவும், பகுப்பாய்வு செய்யவும் கட்டாயப்படுத்த வேண்டும்.

மேலும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் பொறுப்புக்கூறலுக்கான வழிகள் தொடர்பாக சபைக்கு அறிக்கை அளிக்க வேண்டும். இலங்கைக்குள் நிலைமை தொடர்பாக அறிக்கை அளிக்க மனித உரிமைகள் ஆணையாளருக்கு புதுப்பிக்கப்பட்ட ஆணையும் வழங்கப்பட வேண்டும். கடுமையான முறைகேடுகளுக்கு உட்பட்ட நபர்கள் மீது வெளிநாட்டு அரசாங்கங்கள் தடைகளை விதிக்க வேண்டும்.

'உயர் ஸ்தானிகர் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஒரு புதிய தீர்மானம் பதிலளிப்பதை உறுதி செய்து, சபையின் பொறுப்புகளை நிலைநிறுத்துவதை மனித உரிமைகள் பேரவை உறுதி செய்ய வேண்டும். சர்வதேச அழுத்தத்தைத் தக்கவைக்க ஓர் அர்த்தமுள்ள புதிய தீர்மானம் முக்கியமானது.

அல்லாவிடில் உலகெங்கிலும் உள்ள துஷ்பிரயோகக்காரர்களுக்கு ஒரு பயங்கரமான செய்தியை தந்துவிடும். அதாவது நாடுகளின் சமூகம் மிகக் கொடூரமான குற்றங்களைக் கூட கவனிக்காமல் இருக்க தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரம்:

# வெள்ளி போராட்டம் நடத்த அழைப்பு; செந்தில் தொண்டமான் விடுத்தார்!



ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை முன்னிலைப்படுத்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பெருந்தோட்ட தொழிலாளர்கள் அனைவரையும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுமாறு பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்த அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் தொடர்பான கோரிக்கை அண்மைக்காலமாகப் பேசப்பட்டு வருகின்ற நிலையில், அமரர் ஆறுமுகன் தொண்டமானும் இது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்திருந்தார். அதற்கமைய, அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. அதேபோன்று ஜனாதிபதி, பிரதமர் மட்டுமன்றி பெருந்தோட்டத்துறை அமைச்சர்களும் ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் தொடர்பாகக் கம்பனிகளுடன் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும் அவை வெற்றியடையவில்லை.

அதற்கமைய, எதிர்வரும் ஆறாம் திகதி சம்பளம் தொடர்பான பேச்சு இருப்பதால், ஐந்தாம் திகதி அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுமாறு அனைத்து பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் - 19 வைரஸ் தொற்றுக்கு மத்தியில் எம்மால் பாரிய ஆர்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. அதன் காரணமாகவே அன்றையதினம் அனைவரையும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

# 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்






2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிகளைக் குறைக்கக்கோரி கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலைகளைப் பாதுகாக்கும் மக்கள் அமைப்பால் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி செயலகம் வரையில் தமது ஆர்ப்பாட்டத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னெடுத்தனர்.

காலைக்கதிர்

> பேச்சுச் சுதந்திரம் எனும் போர்வையில் பிறர் மீது செய்யும் அவதூறுகள் ஏற்புடையவை ஆகா. அவை ஒழுக்கமாகா, அவை அரசமைப்பாலும் ஏனைய சட்ட ஏற்பாடுகளூடாகவும் கட்டுப்படுத்தப்படும். ஒரு நாகரிகமான, பண்பாட்டு விழுமியம்மிக்க நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் இனம், அதன் வரலாற்று நீட்சியில் விலைமதிப்பற்ற பேரிலக்கியங்களாலும், சிற்றிலக்கியங்களாலும் வளப்படுத்தப்பட்டும் வழிப்படுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

# பேச்சுச் சுதந்திரத்தின் பேரில் பிறர்மீதான அவதூறை அரசமைப்பு, சட்ட ஏற்பாடு கட்டுப்படுத்தும்!

தம்பிராசா யுகேஸ் - அதிபர்,
சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை



'வாயே வாழ்த்து கண்டாய்' இன்றைய உலகில் மனித குலத்தின் இயங்கு நிலையைத் தீர்மானிப்பவை தேவைகளாகவே அமைகின்றன. அவைபெரிதும் சிறிதுமாக அத்தியாவசியத் தேவைகளாகவோ அல்லது ஆடம்பரத் தேவைகளாகவோ இருந்துவருகின்றன.

இவற்றின் காரணமாகத் தொடர்பாடல் என்பது பல்வேறு தளத்தில் பல்வேறு முறைகளில் நடந்தேறி வருகின்றது. இந்தத் தொடர்பாடல் தனிநபர், குழுக்கள் அல்லது அமைப்புக்களுக்கிடையேயும், நாடுகளுக்கிடையேயும் நிலவி வருகின்றது. அவை முறைசார்ந்த மற்றும் முறைசாரா வகையிலும் நாடுகளுக்கிடையே இராஜதந்திர வரன்முறையிலும் நடந்தேறி வருகின்றன. இவற்றின் பிரதான உள்ளடக்கமாக கருத்துப் பரிமாற்றமே இருந்து வருகின்றது. அந்தக் கருத்துகள் பரிமாறப்படும் சொற்களினூடு தெளிந்து கொள்ளப்படும் ஆக மொத்தத்தில் சொற்களே அத்திவாரமாக அமைகின்றன எனக் கூறமுடியும். அந்தச் சொற்கள் ஒரு நல்ல சிந்தனையிலிருந்து புறப்படுபவையாக அமைய வேண்டும். ஒரு நல்ல சிந்தனை என்பது ஒரு பொதுநலன் சார்ந்ததாக அமைய வேண்டும். பொது நலனைப் புறந்தள்ளிவெறுமனே தனி நலன்களை முதன்மைப்படுத்துவதாக அமைதலாகாது. தனிநலன்களை விடுத்து பொதுநலன் கருதி வரும் சொற்களை 'வாழ்த்து' என்று சொல்லி மகிழ்வதுண்டு. இதனையே திருநாவுக்கரசு சுவாமிகளின் திரு அங்கமாலை பாடல் தரும் 'வாயே வாழ்த்து கண்டாய்' என்பதன் உட்பொருளாகக் கொள்ள முடியும்.



**'வாயே, வாழ்த்துக் கண்டாய்! - மதயானை உரி போர்த்து,**
**பேய் வாழ் காட்டு அகத்து ஆடும் பிரான் தன்னை - வாயே, வாழ்த்து கண்டாய்!'** என்பதனூடு வாயேநீ எப்போதும் வாழ்த்துவாயாக என்கிறார். மதயானையின் தோலினை தன் மீது போர்த்தி பேய்கள் வாழும் காட்டிலே நடமாடும் பிரான் தன்னை வாழ்த்துவாயாக என்கின்றார்.

எப்போதும் நமது சொற்கள் வெளிவிடும் கருத்துகள் பொதுநலன் சார்ந்தனவாக, இறைவனை, இயற்கையின் பேருண்மைகளைப் போற்றுவனவாக, அவற்றின் நலன்களைப் பேசுவனவாக அமைதல் வேண்டும். ஆனால், தற்போதைய உலக ஒழுங்கில் இவை வெகுவாக அருகி வருகின்றன என்றே நியாயமான சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. பரந்து விரிந்த இயற்கையை, இயற்கையின்பேருண்மைகளைத் தனிநலன் சார்ந்து குறுகிய வட்டத்துக்குள் சிந்திக்கின்ற, சிந்திக்கத்தலைப்படுகின்ற தன்மை பல்வேறு மட்டாங்களிலும் பரவிக்கிடக்கின்றது. இதனால் உலகை ஓர்அமைதிப் பூங்காவாக வைத்திருக்க முடியுமா? என்ற நியாயமான அச்சங்களும் மேலெழத்தான் செய்கின்றன. மொழிசார்ந்த, சமயம் சார்ந்த இலக்கியங்களில், வரலாற்றுத் தடங்களில், வாழ்க்கை முறைகளில் பொதுநலன் சார்ந்த வாழ்க்கை, வழக்கங்களை வரலாறு நமக்குத் தந்தபோதும் அவை உள்ளங்கை நெல்லிக்கனியாக இருக்கின்ற போதும் அவற்றின் சுவை பலருக்குத் தெரியாமல் இருக்கின்றமை வேதனையானது. ஒருமுறை சோழவள நாட்டில் குலோத்துங்க மன்னனின் முடிசூட்டு விழாவில் ஔவையாரும் கலந்து கொண்டார். அமைச்சர்களும் புலவர்களும் பலவாறு வாழ்த்தி மகிழ, ஔவையாருக்குத் தன் முறை வாய்க்கப்பெற்ற போது 'வரப்புயர....' என்று வாழ்த்தினார்.

**'வரப்புயர நீருயரும் நீருயரநெல்லுயரும்**
**நெல்லுயரக் குடியுயரும் குடியுயரக் கோலுயரும்**
**கோலுயரக் கோனுயர்வான்'** பொதுநலனை வாழ்த்தாது தனியே மன்னனை மட்டும் வாழ்த்துவதால் ஏது பயன் என ஔவையார் நினைத்தார் போலும். நீரை, நீர் மேலாண்மையைக் கூறி, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று நினைத்த உள்ளம் ஊரை, உலகைப் பஞ்சம் பட்டினி இன்றி வாழ வைக்க உணவை ஆக்கும் திறம் கூறி, மன்னனை வாழ்த்திய மதியை நமது மனமும் வாழ்த்தாமல் இருக்க முடியாது. அவ்வாறே வள்ளுவரும்,

**'அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்'** என்பார். நன்மையான விடயங்களையே ஆராய்ந்து உணர்ந்து அவற்றையே நாளும் இனியதாகக் கூறி வந்தால் தீயவை தேய்ந்தொழிந்து அறம் பெருகும் என்றார். எப்போதும் நல்லவை நாடி எனும் போது அனைத்து உயிர்களுக்கும் நன்மை தரத்தக்க, இயற்கையின் பேருண்மைகளைப் போற்றி வளர்க்கின்ற அனைத்துக் கருமங்களையும் நல்லவை எனலாம்.

இயற்கையின் பன்மைத்துவத்தை, உயிர்களின், இனத்தின் பன்மைத்துவத்தை, பல்கலாசாரத்தை மதிக்கின்ற, ஓம்புகின்ற அனைத்தையும் 'நல்லவை நாடி' எனலாம், ஆக, அத்தகைய நல்லவற்றையே நினைந்து அவை தொடர்பில் வெளிவருகின்ற சொற்கள் கருத்துகளே அறத்தை வளர்க்கும் தன்மை வாய்ந்தவை. பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பன ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட எண்ணக்கருக்களேயன்றி பிறருடைய உரிமைகளை, நலன்களைப் பாதிக்கும்வண்ணம் செயற்படுவதற்குரியவை அல்ல. இவற்றையே வள்ளுவர்

**'நல்லவை நாடி இனிய சொலின்**
**அறம் வளரும்'** என்றார். இங்கு நல்லவை என்பதைப் பொதுநலன், பொதுமக்கள் நலன் சார்ந்த எண்ணக்கருவாகச் சட்டவழியில் சிந்திக்கலாம். 'இனிய சொலின்' எனும்போது இது கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரத்துடன் தொடர்புபடுத்தப்படலாம். அப்போது தான் அறம் பெருகும் என்றார். சட்ட வழியில் அப்போது தான் சட்டத்தின் நோக்கமாகிய நீதி நிலைக்கும் எனலாம்.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயத்தின் உறுப்புரை 14(1)அ வெளிப்படுத்துவது யாதெனில் 'ஒவ்வொரு பிரஜையும் வெளியிடுதலுட்படப் பேச்சுச் சுதந்திரத்துக்கும் கருத்துத் தெரிவித்தற் சுதந்திரத்துக்கும் உரித்துடையவர்' எனக் கூறுகின்றது. அந்த வெளியிடுதலும் பேச்சுச் சுதந்திரமும் பொதுநலன் சார்ந்ததாக, அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவனவாக அதன் மூலம் அறத்தைப் பெருக்கும் நோக்கம் கொண்டனவாக அமைதல் வேண்டும். அவ்வாறின்றேல் அவை மட்டுப்படுத்தப்படவேண்டியவை ஆகின்றன.

அரசமைப்பின் உறுப்புரை 15(7) இதற்குரிய

> ஒரு நாகரிகமான, பண்பாட்டு விழுமியம்மிக்க நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் இனம், அதன் வரலாற்று நீட்சியில் விலைமதிப்பற்ற பேரிலக்கியங்களாலும், சிற்றிலக்கியங்களாலும் வளப்படுத்தப்பட்டும் வழிப் படுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

மட்டுப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. தேசியப் பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, பொதுச் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பவற்றின் நலன்கருதி மட்டுப்படுத்தப்படும் என்கின்றது. இங்குள்ள 'நலன் கருதி' என்பதையே இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்கூறும்நல்லுலகு உலகிற்குத் தந்த பெரும் புலவர் வள்ளுவர் 'நல்லவை நாடி' என்று விளித்தார். உறுப்புரை 15(7)ஐ தொடர்ந்து கூறுவதாவது 'மற்றவர்களின் உரிமைகள் சுதந்திரங்கள் என்பவற்றுக்கு முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்காக அல்லது ஜனநாயகச் சமூகத்தின் பொதுச்சேம நலத்தின் நீதியான தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காகச் சட்டத்தால் விதிக்கப்படக் கூடியவாறான மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும் எனப்படுகின்றது.

உரிமை, சுதந்திரத்தை அங்கீகரித்து நீதியை நிலை நாட்டுவதையே வள்ளுவர் 'அறம் பெருகும்' என்றார். இந்த அறம் பொதுமக்கள், ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம், ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பனவற்றையும் உள்ளடக்கும். ஒழுக்கம் எனும்போது பேச்சு, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றைத் தவறாகப் புரிதலினூடாக மற்றவர்கள் மீது செய்யும் அவதூறைத் தடுப்பதையும் நோக்காகக் கொண்டது.

ஆகவே, பேச்சுச் சுதந்திரம் எனும் போர்வையில் பிறர் மீது செய்யும் அவதூறுகள் ஏற்புடையவை ஆகா. அவை ஒழுக்கமாகா, அவை அரசமைப்பாலும் ஏனைய சட்ட ஏற்பாடுகளூடாகவும் கட்டுப்படுத்தப்படும். ஒரு நாகரிகமான, பண்பாட்டு விழுமியம்மிக்க நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழ் இனம், அதன் வரலாற்று நீட்சியில் விலைமதிப்பற்ற பேரிலக்கியங்களாலும், சிற்றிலக்கியங்களாலும் வளப்படுத்தப்பட்டும் வழிப்படுத்தப்பட்டும் வந்திருக்கின்றது. அங்கு அடராக விரவிக்கிடக்கும் தத்துவக் கருத்துகள் உலகின் பன்மைத்துவ சமூகங்களையே வழிகாட்டப் போதுமானவையும் மிகையானவையுமாகும். அவற்றின் வாரிசுகளாகிய நாங்கள் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தவேண்டும். அவற்றின் பெருமைகளைப் பேசுவதென்பதே உலகை வாழ்த்தப் போதுமானது. அவற்றினூடு வாழ்ந்து களிப்பதென்பது அரிய பேறுகளிலொன்று. புதிய தலைமுறைக்கு அவற்றைக் கையளிப்பதும், புகட்டுவதும் அத்தகைய பெரும் பொறுப்பை சுமப்பதும், கல்வியியலாளர்களதும் சமூகத்தினதும் கடமையாக வரலாறு நம்மிடம் கையளித்திருக்கின்றது. அவற்றை மறந்துபோகின்றமை ஒரு நீண்ட பாரம்பரியம் மிக்க இனத்தின் தொடர்ச்சியைக் குலைப்பதாகவே அமையும்.

# அரசு வாக்குறுதிகளை மீறுகின்றமை மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும்!

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டவர்களுக்கு விற்பதற்கோ, குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கோ ஒருபோதும் இடமளிக்க முடியாது. தேசிய வளங்களைப் பாதுகாப்போம் என கூட்டணியமைத்து நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம்.

வாக்குறுதிகளை மீறுகின்றமை மக்களுக்கு இழைக்கும் துரோகமாகும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் லங்கா சமசமாஜ கட்சி, கம்யூனிச கட்சி ஆகியன ஒன்றினைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டன. இதன்போதே பேராசிரியர் திஸ்ஸ விதாரண இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வியாபார நவடிக்கைகளுக்காக கூட பிற நாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய வளத்தின் ஊடாக நாட்டு மக்கள் மாத்திரம் பயன் பெறவேண்டும் என்பதற்காகவே கடுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றோம். கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையாக அபிவிருத்தி செய்யும் பொறுப்பை துறைமுக அதிகார சபை ஏற்க வேண்டும். அதற்கான வளங்கள் தேசிய மட்டத்தில் காணப்படுகின்றன.

1,320 மீற்றர் நீளமான கிழக்கு முனையத்தில் 420 மீற்றர் நீளத்தை தேசிய பொறியியலாளர்கள் அபிவிருத்தி செய்துள்ளார்கள். ஆகவே, மிகுதி பரப்பை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை பிற நாட்டுக்கு வழங்க வேண்டிய தேவை கிடையாது.

இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு முனையத்தை வழங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியிலும், முதலாளிமார் வர்க்கத்திலும் இந்நிறுவனம் தொடர்பில் சாதகமான அபிப்பிராயம் கிடையாது.

ஆகவே, எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. தேசிய வளங்களை விற்கமாட்டோம். அவற்றைப் பாதுகாப்போம் என நாட்டு மக்களுக்கு தேர்தல் காலத்தில் வாக்குறுதி வழங்கியுள்ளோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்குப் புறம்பாக செயற்பட இடமளிக்க முடியாது. அரசாங்கத்துடன் கூட்டணியமைத்துள்ள காரணத்தால் எமது கட்சியின் கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது. – என்றார்.

## கிண்ணியா வயல்களை பார்வையிட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகள்



திருகோணமலைமாவட்டத்தில்கிண்ணியா புளியடிக்குடா விவசாயப் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டு நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட நெல் வயல்களை பார்வையிடுவதற்காக விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் கடந்த திங்கட்கிழமைகளவிஜயம்செய்துள்ளனர்.

இந்தக்களவிஜயத்தில்உதவி விவசாய பணிப்பாளர், பாடவிதான உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர்கள் எனப் பலரும் வருகை தந்திருந்தனர்.

விவசாய நெற்செய்கை நோய்த் தாக்கம் தொடர்பில் அவர்கள் ஆராய்ந்தார்கள்.

## ஆங் சான் சூகியின் சிறைப்பிடிப்பு; கண்டிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி!

மியன்மார் தேசிய ஜனநாயக லீக் கட்சித்தலைவர் ஆங் சான் சூகி, அந்நாட்டு இராணுவத்தால் சிறைப்பிடிக்கப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

மியன்மாருக்கு ஜனநாயகம் கொண்டுவருவதற்கான போராட்டத்தில் 15 ஆண்டுகள் வீட்டுக்காவலில் இருந்த தேசிய ஜனநாயக லீக் கட்சித்தலைவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி, இராணுவத்தினரால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதுதாடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

மியன்மாரில் இடம்பெற்ற இராணுவ சதித்திட்டத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மியன்மாரில் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஜனநாயக சீர்திருத்தங்கள் ஆரம்பமானதுடன், இராணுவ ஆட்சியின் பின்னர் 2015 ஆம் ஆண்டில் முதன்முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

எனினும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் மியன்மாரில் இடம்பெற்ற முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்தன.

தேர்தலின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட அரச நிர்வாகம் பொறுப்பேற்றுக்கொண்டமை மியன்மாரில் ஜனநாயக ரீதியில் இடம்பெற்ற மிகமுக்கிய முன்னேற்றமாக அமைந்தது.

எனவே, மியன்மாரின் நாடாளுமன்றத்துக்கு ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்டவர்களைக் கைது செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை உடனடியாக மீளப்பெறுமாறு மியன்மார் இராணுவத்தை வலியுறுத்துகின்றோம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மியன்மாரின் நிலைமையை உன்னிப்பாக கண்காணிக்கும் வெளி விவகார அமைச்சு

இராணுவ சதித்திட்டத்தைத் தொடர்ந்து மியன்மாரின் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக வெளி விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே யாங்கோனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம், மியன்மாரில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாகவும், ஆதரவு தேவைப்படும் எந்தவோர் இலங்கையருக்கும் உதவத் தயாராக இருப்பதாகவும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சகத்துக்குத் தெரிவித்துள்ளது.

இதுவரை நாட்டில் வன்முறை அல்லது கலவர சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை என்றும் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

மியன்மாரின் சக்திவாய்ந்த இராணுவம் சதித்திட்டத்தில் நாட்டின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றி அவசரகால நிலையை அறிவித்தது, ஆங் சான் சூகி மற்றும் பிற மூத்த அரசாங்கத் தலைவர்கள் சோதனைகளில் தடுத்து வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மாணவி நீரில் மூழ்கி மரணம்: கைதான ஆசிரியருக்கு பிணை!

பலாங்கொடை – கல்தொட்ட பகுதியில் நீரில் மூழ்கி 16 வயதான மாணவியொருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட ஆசிரியர் கடந்த திங்கட்கிழமை பலாங்கொடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். இந்நிலையிலேயே அவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வாரம் வளவை கங்கையில் நீராடச் சென்ற மாணவியொருவர் உயிழந்துள்ளார். மேலும் 12 மாணவர்களும் அவருடன் இணைந்து நீராடச்சென்றுள்ளனர். குறித்த ஆசிரியர் அதிபரிடமோ அல்லது வலயக்கல்வி பணிப்பாளரிடமோ அனுமதி பெறாமல் மாணவர்களை, வெளியில் அழைத்துச் சென்றமைக்காக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஐஸ், ஹெரோயின் போதையுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது!

தலங்கம பகுதியில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள்களுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிம்புலாவல மற்றும் தலவத்துகொட ஆகிய பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட ஐந்து மணிநேர சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தலவத்துகொட பகுதியைச் சேர்ந்த 26 – 44 வயதுக்கிடைப்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 140 கிராம் ஐஸ் போதைப் பொருளும், 13 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

| தாவர பீடை நாசினிகள் | கட்டுப்படுத்தப்படும் நோய், பீடைகள் |
|---|---|
| உள்ளிக் கரைசல் | சிற்றுண்ணி, அழுக்கணவன், இலைஅரிப்புழு, பச்சை இலைத்தத்தி, பனிப் பூச்சி. |
| வேப்பம் இலைக்கரைசல் | தண்டுத்துளைப்பான், காய்துளைப்பான், சிற்றுண்ணிகள், எறும்புகள், பச்சை இலைத்தத்தி, பனிப் பூச்சி. |
| அன்னமுன்னா இலை | அழுக்கணவண், சிவப்பு பூசணி மூட்டுப்பூச்சி, கோவா அந்து. |
| வெள்ளைப்பூடும் வெங்காயமும் | அழுக்கணவண், பங்கசு நோய்கள். |
| பப்பாசி | பங்கசு நோய்கள், பக்டீரியா நோய்கள். |
| எருக்கலை | அறக்கொட்டியான், இலைஅரிப்புழுக்கள். |
| வேப்பிலை/ நொச்சியிலை | களஞ்சியப்பீடைகள். |
| மிளகாய் | எறும்பு, அழுக்கணவண், இலையரிப்புழுக்கள், கோவா புழுக்கள், கெக்கரி சித்திர வடிவ வைரஸ் நோய். |
| மாட்டுச் சிறுநீர் | வெண்மூட்டுப்பூச்சி, அழுக்கணவண், இலையரிப்புழு, பனிப்பூச்சி, சிற்றுண்ணி. |
| மரச் சாம்பல் | சிற்றுண்ணி, எறும்பு, அழுக்கணவண். |
| வேப்பம் விதைப் புண்ணாக்கு | வேர்க்கறையான். |
| சவர்க்காரம் | வெண்மூட்டுப்பூச்சி, செதில் பூச்சி |
| மாட்டுச் சாணம் | இலைஅரிப்புழு |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்

# மன்னார் மீனவர்கள் 3 நாள்களாக மாயம்!

(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மூவர் மூன்று நாள்களாகக் கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார், ஓலைத்தொடுவாய் பகுதியில் இருந்து கடந்த சனிக் கிழமை இரவு படகு ஒன்றில் கடற் றொழிலுக்குச் சென்ற வேளை பட கின் இயந்திரம் பழுதடைந்த காரணத்தால் நடுக்கடலில் தத்தளிப்பதாகக் கரைக்குத் தகவல் அனுப்பியுள் ளனர். இருந்த போதிலும் அதன் பின்னர் எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை என உறவுகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணாமல்போன படகு தொடர்பில் உறவுகளால் கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்களத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில் திணைக்களம் கடற்படையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதேநேரம், காணாமல்போன படகு மூன்று மீனவர்களுடன் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு இந்தியாவின் கரையை அடைந்திருக்கும் என்ற சந்தேகமும் எழுப்பப்படுகின்றது.


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned post.

**FACULTY OF SCIENCE**

**Scientific Assistant Grade I/ Grade II**

**Note 1:** Preference will be given

1. To the candidates who holds a Bachelor of Honours degree in Science / Engineering / Computing from a UGC recognized HEI.
2. To the candidates who have sound knowledge and experience in Software design, development, maintenance and Software Quality Assurance.

**FACULTY OF MEDICINE**

1. **Scientific Assistant Grade I/ Grade II** in Microbiology

**Note 2:** Applications for the above post will be entertained from the candidates who have the degree in the field of Microbiology/ Medical Laboratory Sciences/Human Biology/Molecular Microbiology.

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale as at 01.01.2021 |
|---|---|
| Scientific Assistant Gr.I | -Rs.50,625-3x1335 -54630 (EB) 55,695- 14x1335-74,655/-p.m |
| Scientific Assistant Gr.II | - Rs.48,385-19x690 -61,495/- p.m |

**Closing date:**
Applications should reach us on or before **03.03.2021.**

In addition to the above salary, the allowances approved by the University Grants Commission applicable to the posts will also be paid.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip.** The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications for the **other posts** shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka** under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. **Submission of Applications will not be entertained in person.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Applications and referees reports should be in the relevant format. Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.**
**02.02.2021**


# புதிய பிரேரணையால் பதறுகிறது இலங்கை!

## இந்தியா உள்ளிட்ட ஐ.நா. உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைப் பெறவும் முயற்சி



கொழும்பு, ஜன.02

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள புதிய பிரேரணையால் ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசு பதற்றமடைந்துள்ளது.

இந்தப் பதற்றத்தைச் சமாளிக்கும் வகையில் புதிய பிரேரணைக்கு எதிராக இந்தியா உள்ளிட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமை நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை அரசு ஆரம்பித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதல் கட்டமாக இலங்கை அரசு இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில் இது தொடர்பில் இந்தியா பரிசீலித்து வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 15 நாடுகளின் ஆதரவைப்பெறும்நடவடிக்கைகளை இலங்கை அரசு முன்னெடுத்துள்ளது எனத் தெரி விக்கப்படுகின்றது.

சீனாவும் ரஷ்யாவும் ஏற்கனவே இலங்கைக்கு சர்வதேச அரங்கில் ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள

# மக்களை மீளக்குடியமர்த்த அமைச்சரவை அங்கீகாரம்

யாழ்ப்பாணம், ஜன.02

யாழ்ப்பாணத்தில் உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளாகி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணியில்லாத மக்களைத் துரிதமாக மீளக்குடியமர்த்துவதற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் காணி இல்லாத 381 குடும்பங்களுக்கு 7 லட்சம் ரூபாசெலவில்தலா20பேர்ச்காணியை வழங்க ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 409 குடும்பங்களில் 233 குடும்பங்களுக்குக் காணிகள் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தங்களது பிறப்பிடத்தை அண்மித்த பகுதியில் காணிகளை வழங்குமாறு இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் தற்போதைய பெறுமதிக்கு அமைய குறித்த பிரதேசத்தில் 7 லட்சம் ரூபாவுக்கு 20 பேர்ச் காணியை கொள்வனவு செய்ய முடியாதென்பது தெரியவந்துள்ளது.

இதனால் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட அதே தொகைக்கு அரச விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுக்கு அமைய 10 தொடக்கம் 20 பேர்ச்சஸ் வரையிலான காணியைத் தனியார் உரிமையாளர்க ளிடமிருந்து கொள்வனவு செய்து வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொறிமுறையைத் தயாரித்து மக்களின் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கும்நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளது.

# மங்களவின் நகர்வுகள் மீது ஆளுந்தரப்பு கழுகுப் பார்வை

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் நகர்வுகள் தொடர்பில் அரசும், அரச சார்பு அமைப்புகளும் கழுகுப் பார்வை செலுத்தியுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தெற்கு அரசியலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் முக்கிய புள்ளிகளில் ஒருவராக மங்கள சமரவீர திகழ்ந்தார். சர்வதேச மட்டத்தில் அவருக்குப் பாரியதொரு வலைப்பின்னல் இருக்கின்றது.

பௌத்த தேரர்கள் சிலரின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சித்ததாலும், அவர் பௌத்த மதத்துக்கு எதிரானவர் என்ற தொனியில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர் பரப்புரைகளை முன்னெடுத்ததாலும் பௌத்தர்கள் மத்தியில் மங்களவுக்கான செல்வாக்கு சரிந் துள்ளது. நாடாளுமன்ற அரசியலுக்கு மங்கள விடை கொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். ஆனாலும், சர்வதேச மட்டத்தில் மங்களவுக்கான செல்வாக்கு குறையவே இல்லை. அவரை ஜனநாயகப் போராளியாகவே மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பார்க்கின்றனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்றுள்ளார். முக்கிய பதவிகளுக்கு இராஜதந்திரத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்து வருகின்றார். சமந்தா பவர் உட்பட இலங்கைக்கு நெருக்கடி கொடுத்த பலர் முக்கிய பதவிகளுக்குத் தெரிவாகியுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி ஆட்சியானது, கொழும்புக்குத் தலையிடியையும், நெருக்கடியையும் கொடுக்கும் ஆட்சியாகும். ஜெனிவாவில் பிரேரணைகள் நிறைவேறுவதற்குக் கூட ஜனநாயகக் கட்சியின் ஆட்சியே காரணமாக அமைந்தது. மங்களவுக்கு நெருக்கமான பலர் ஜனநாயகக் கட்சியில் இருக்கின்றனர்.

மறுபுறத்தில் மங்கள பலமானதொரு சிவில் அமைப்பை உருவாக்கி வருகின்றார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மங்களவின் நகர்வுகள் ஆளுந் தரப்பால் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

# வில்பத்து விவகாரத் தீர்ப்புக்கு எதிராக ரிஷாத் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு!

பாதுகாக்கப்பட்ட வில்பத்து தேசிய பூங்கா காட்டுப்பகுதியில், கல்லாறு சரணாலயத்தில் காட்டை அழித்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பொறுப்புக்கூற வேண்டும் என மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பறிவித்திருந்தது.

இதற்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உயர் நீதிமன்றில் விசேட மேன் முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அழிக்கப்பட்ட வனப்பகுதியை மீள உருவாக்க, அவர் அப்பகுதியில் தனது சொந்த செலவில் மரம் நட வேண்டும் எனவும் இதன்போது மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்த தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது எனவும், அந்தத் தீர்ப்பை வலுவிழக்கச் செய்யுமாறும் இந்த மேன்முறையீடு ஊடாக ரிஷாத் பதியுதீன் கோரியுள்ளார்.

ஆப்தீன் சட்டத்தரணிகள் நிறுவனம் ஊடாக இம்மேன்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ள ரிஷாத் பதியுதீன், 8 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். அதன்படி சுற்றுச்சூழல் நீதிக்கான மையம், வனப் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, வன ஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம், தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம், மன்னார் மாவட்ட செயலாளர், சுற்றாடல் அமைச்சர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகிய 8 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேன் முறையீட்டு நீதிமன்றம் முன்னெடுத்த விசாரணைகளுக்கு உட்பட்ட விடயம் நடந்ததாகக் கூறப்படும் காலப்பகுதியில், தான் வீடமைப்பு அமைச்சராகவோ அல்லது வனப் பாதுகாப்பு அமைச்சராகவோ இருக்கவில்லை என விசேட மேன் முறையீட்டு மனுவில் சுட்டிக்காட்டியுள்ள ரிஷாத் பதியுதீன், தான் காடழிப்பு மற்றும் மீள் குடியமர்த்தல் நடவடிக்கைகளை அந்தப் பகுதியில் சட்ட விரோதமாக முன்னெடுக்கவில்லை எனவும், அவ்வாறு தான் செயற்பட்டமைக்கான எந்த சான்றுகளும் இல்லாத நிலையில் குறித்த மேன் முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பை செல்லுபடியற்றதாக்குமாறும் அம்மனு ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

கடந்த 2019 நவம்பர் 19 ஆம் திகதி உயர் நீதிமன்றம் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான தீர்ப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜே.ஆரின் சாயலில் பழிவாங்கும் கோட்டா!

## ஜே.வி.பி. கடும் சாடல்



இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன செய்தவற்றையே தற்போதுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செய்கின்றார்.

1978 இல் நீதிமன்ற அதிகாரங்களையுடைய ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உள்ளிட்டோரது குடியுரிமையை நீக்கி, தனக்கு எதிரானவர்களை ஜே.ஆர்.ஜெயவர்தன பழிவாங்கியமையைப் போலவே தற்போது கோட்டாபய ராஜபக்ஷவும் அவருக்கெதிரானவர்களை பழிவாங்கலுக்குட்படுத்துகின்றார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

ராஜபக்ஷாக்களையும் அவர்களுக்கு நெருக்கமானவர்களையும் 79 வழக்குகளிலிருந்து விடுவிக்குமாறும் வழக்குத் தாக்கல் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இது வழமையான விசாரணை ஆணைக்குழுக்களுக்கும் அப்பால் தண்டனை வழங்கும் ஆணைக்குழுவாக செயற்பட்டுள்ளது. இது அபாயமுடையதாகும். விசாரணை ஆணைக்குழுவொன்றுக்கு தண்டனை வழங்க முடியாது.

1972 ஆம் ஆண்டு தண்டனை வழங்குவதை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. எனினும் அதற்கு சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 1978 இல் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்தனவால் அவருக்குரிய நிறைவேற்றதிகாரம் மற்றும் நாடாளுமன்ற அதிகாரம் என்பவற்றைப் பயன்படுத்தி நீதிமன்ற அதிகாரத்தையுடைய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் மூலமாகவே ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை இரத்து செய்யப்பட்டது.

1978 இன் பின்னர் இவ்வாறு நீதிமன்ற அதிகாரமுடைய ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படவில்லை. ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்தன செய்தவற்றை தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்துள்ளார்.

தற்போது இது போன்று ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கான தேவை என்ன? ராஜபக்ஷாக்கள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு எதிரானவர்களை வழக்குகளிலிருந்து விடுவிப்பதே இதன் நோக்கமாகும். தற்போது 79 வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் உண்மையில் தவறு செய்யவில்லை என்றால் தைரியமாக நீதிமன்றத்தினூடாகத் தீர்வைப் பெற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால் நீதிமன்றத்தில் இவர்களுக்கெதிரான வழக்குகள் தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் அவர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்படும். ஜனாதிபதி கோட்டாபய ஆட்சிக்கு வர முன்னர் அவருக்கு எதிரான எந்தவொரு வழக்கிற்கும் நீதிமன்றத்துக்கு வந்ததில்லை. தன்மீதான குற்றம் நிரூபிக்கப்படும் என்ற அச்சமே அவரும் அவரது சகாக்களும் நீதிமன்றத்தை புறக்கணிப்பதற்கான காரணமாகும்.

எனவே, ஆணைக்குழுவினூடாக வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் குற்றமற்றவர்கள் என்றால் நீதிமன்றத்தில் அதனை நிரூபிக்குமாறு சவால் விடுகின்றோம்.

வழக்குகளிலிருந்து விடுவிப்பது மாத்திரமன்றி வழக்கு தொடர்ந்தவர்களைப் பழிவாங்குவதும் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதன் இலக்காகும். எனவே, ஜனாதிபதி கோட்டாபய நியமித்த ஆணைக்குழுவை 'அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஆணைக்குழு' என்று கூறுவதைவிட 'அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழு' என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதிகாரங்களை அதிகரித்துக் கொள்வதற்காக சிலருக்கு லஞ்சம் வழங்கி 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டமை மற்றும் தனது குடும்பத்தாரை வழக்குகளிலிருந்து விடுவித்தமையைத் தவிர மக்களுக்காக எதனையுமே செய்யவில்லை.– என்றார்.

# இலங்கையின் நிபந்தனைகளை ஏற்பவர்களுக்கு மேற்கு முனையத்தை வழங்க நடவடிக்கைகள்!




தேவை ஏற்படின் மேற்கு முனையத்தை இலங்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் தரப்பினருக்கு வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து பார்க்க முடியும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையாக இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கீழ் வைத்துக்கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கொழும்பு தெற்கு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் அபிவிருத்தி செய்வதற்கான இலங்கை, இந்திய, ஜப்பான் நாடுகளுக்கிடையிலான பங்களிப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய இந்தியாவின் முதலீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டு முன்மொழிவை பகுப்பாய்வு செய்வதற்காக பேச்சு உடன்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்கு 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## யாழ்.குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் முப்படையினர் மற்றும் பொலிஸார் வசமுள்ள காணிகள் தனியாருடையது. அதற்குச் சொந்தமான மக்கள் வேறு இடங்களில் வாடகைகளில் குடியமர்ந்துள்ளார்கள். இராணுவத்தின் வசமுள்ள காணிகளை அவர்கள் தோட்டச் செய்கைக்கும் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர். மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும். அவற்றை வழங்குவதன் மூலம்தான் மக்கள் அதிலிருந்து பயன்பெற்று முன்னேறுவார்கள். எனவே, இந்தக் காணிகளை மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனக் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

போர் முடிவடைந்து 12 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படாமல் ஏன் உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் இணைத் தலைவர்களில் ஒருவரான அங்கஜன் இராமநாதன் பதிலளிக்கையில், மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், தீர்மானத்தை அனுப்புகின்றபோது முழுமையான விபரங்களுடன் சேர்த்து அனுப்புவதன் மூலம் அந்தக் காணிகளை விடுவிப்பது இலகுவாக இருக்கும் என்றார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில், காணிகள் விடுவிடுவிக்கப்பட வேண்டும் என்பது அனைவரினதும் கோரிக்கையாக இருக்கின்றது. அவ்வாறான நிலையில் இராணுவத்தினரின் தேவைக்காகக் காணிகள் அளவீடு செய்யப்பட்ட நிலைமையும் உள்ளது. அதேபோல் வேறு பல காணிகளுக்கு அளவீட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது எதிர்ப்புக்களால் கைவிடப்பட்ட நிலையும் காணப்படுகின்றது. ஆகவே, அவற்றையும் உள்ளிணைத்ததாக தீர்மானத்தை அரசுக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்றார். இதையடுத்து குறித்த விபரங்களுடன் தீர்மானம் அனுப்புவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமே நேற்று இடம்பெற்றது. இதில் துறைசார்ந்த விடயங்கள் பல்வேறு ரீதியாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மாவட்ட திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களம் சார் பிரதிநிதிகள், பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஆங் சான் சூசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடைத்துள்ளது என பி.பி.சி. நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மியன்மார் இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூ சியின் உடல்நிலைக்குப் பாதிப்பு இல்லை என அவரது கட்சியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேற்றுப் பகல் சர்வதேச ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அவரையும் ஏனைய தலைவர்களையும் ஏற்கனவே தடுத்து வைத்துள்ள இடத்திலிருந்து வேறு இடத்துக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் எதுவும் இடம்பெறவில்லை எனவும், அவர்கள் அனைவரும் நலமாக இருக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தநிலையில், ஆங் சான் சூ சி உட்பட கைதுசெய்யப்பட்டுள்ள அனைவரையும் கூடிய விரைவில் விடுதலை செய்யவேண்டும் என அவரது கட்சியின் நிறைவேற்றுகுழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தல் முடிவுகளை இராணுவம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ள குறித்த கட்சி புதிய நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நைபீடாவில் வைத்து ஆங் சான் சூ சி கைது செய்யப்பட்டது முதல் இதுவரை தடுத்துவைத்திருக்கும் இடத்தை இராணுவ அதிகாரிகள் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆங் சான் சூ சியுடன் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளதாக பி.பி.சி. நேற்றிரவு செய்தி வெளி யிட்டுள்ளது.

## பொத்துவில் முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதி வரை நடைபெறவுள்ளது. நில ஆக்கிரமிப்பு, திட்டமிட்ட குடியேற்றம், தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்ற போர்வையில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பூர்வீக வாழிடங்களை ஏப்பமிடல், பேரினவாத அழுத்தங்களுக்கு அடிபணியும் அரசின் போக்குகள், ஜனாஸா எரிப்பு என்பவற்றைக் கண்டித்தே இந்தக் கண்டன நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் என்ற வகையில், முஸ்லிம் சமூகமும் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. எனவே, எமது சகோதர சமூகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நடைபவனிக்கு, முஸ்லிம் சமூகமும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது – என்றுள்ளது.

# மியன்மாரைப் போன்று இலங்கையிலும் இராணுவச் சதிப்புரட்சி அரங்கேறலாம்


பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை

மியன்மாரில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றி பெற்ற ஆங் சான் சூகி அம்மையார் நாடாளுமன்றின் முதலாவது அமர்வைக் கூட்டவிருந்த நாளில் அந்நாட்டின் இராணுவம் பலவந்தமாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது. ஐக்கியநாடுகள் சபையில் ஆரம்பித்து உலக நாடுகள் பலவும் கண்டித்துள்ள இந்த ஜனநாயகப் படுகொலையை இலங்கை மக்கள் தங்களுக்கான ஓர் எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். விழித்துக்கொள்ளா விடில் மியன்மாரைப் போன்று இலங்கையிலும் விரைவில் இராணுவச் சதிப்புரட்சி அரங்கேறலாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மியன்மாரில் இராணுவச் சதிப்புரட்சி அரங்கேறியுள்ளமை தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் அவர் தெரிவிக்கையில் –

பௌத்தம் பெரும்பான்மையாக உள்ள மியன்மாரில் இராணுவத்தால் சிறுபான்மையினராகிய ரோஹிங்கியா முஸ்லிம்கள் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்த இனவழிப்புத் தொடர்பான விசாரணைகளை அந்நாட்டு அரசாங்கத்துடன் இணைந்து முன்னெடுப்பதற்கு ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஏற்பாட்டில் மியன்மார் சுயாதீன புலனாய்வுப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆங் சான் சூகி அம்மையாரின் வெற்றி இந்தப் புலனாய்வுப் பொறிமுறைக்கு இடங்கொடுக்கும் என்று அஞ்சியே நாடாளுமன்றத் தேர்தலில் தனது ஆதரவுடன் போட்டியிட்ட கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ள நிலையில், இராணுவம் சதிப்புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் தாங்கள் நிகழ்த்திய தமிழின அழிப்புக்கு எதிரான கத்தி தங்கள் தலைக்கு மேல் எந்நேரமும் தொங்கிக்கொண்டிருப்பதை ராஜபக்ஷ சகோதரர்கள் நன்கு அறிவார்கள். இதனாலேயே, மீளவும்ஆட்சிபீடம்ஏறியதும்முன்னைய அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியிருந்த ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள்மேம்படுத்தல்தீர்மானத்தில் இருந்து விலகுவதாக அவர்கள் அறிவித்தனர். இப்போது, மனித உரிமைகள் பேரவை ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் கூடவிருக்கும் நிலையில்பேரவையின்ஆணையாளர் இந்த விவகாரம் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படல் வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றமையுடன் குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து அதற்கான தண்டனைகள் தொடர்பாகவும் பேசி வருகின்றார்.

பாதுகாப்புஅமைச்சின்முன்னாள் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியானவுடன் சிவில் நிர்வாகத்தைப் படிப்படியாக இராணுவமயப்படுத்தி வருகின்றார். தனது முன்னாள் இராணுவ சகாக்களை சிவில் நிர்வாகத்தில் உயர் அதிகாரிகளாக நியமித்து வருகிறார். இனப்படுகொலைக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்து சர்வதேசரீதியாகப் பலம் பெற்றுவரும்நிலையில், அதிலிருந்து தப்புவதற்காக, எதனையுமே இராணுவ ரீதியான மனோநிலையுடன் அணுகும் ஜனாதிபதி முற்றுமுழுதான இராணுவ ஆட்சிக்குள் பிரவேசிக்க மாட்டார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. நடைபெற்றது தமிழினப்படுகொலையாயினும் அதன் பொருட்டு இலங்கையில் இராணுவம் மேலாதிக்கம் பெறுவது சிங்கள தேசத்துக்கும் உகந்தது இல்லை என்பதைச் சிங்கள மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மூன்று இலங்கையர் சென்னையில் கைது!

பாதாள உலக குழு தலைவர்களில் ஒருவரான கிம்புலா எலே குணாவும் அவரது மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேலும் ஒரு பாதாள குழு உறுப்பினரான பும்பா என்ற சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த மூவரும் சென்னையில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்டுள்ள இந்த மூவரும் இரகசிய இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஐக்கிய மக்கள் சக்திக்கு புதிய உதவிச் செயலர்!



ஐக்கிய மக்கள் சக்தியின் உதவி செயலாளராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கடந்த திங்கட்கிழமை நியமிக்கப்பட்டார்.

எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் இதற்கான நியமனக் கடிதம் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

ஆசிரியர் தேவை
தரம் 6, 7, 8 - தமிழ்
தரம் 6 தொடக்கம் O/L வரை - சுகாதாரம்
ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு.
தொடர்புகளுக்கு:- 0777404883

புவியியல் A+
DCM யாழ் நகர்
2021 A/L - Paper Class
ஆரம்பம் 06.02.2021
சனிக்கிழமை
காலை 08.00 மணி
2022 A/L – தேசப்படங்கள்
காலை 11.00 மணி
ஆசிரியர்:
P.S.V. தினேஸ்
B.A.(Hons) Geo.spl,
Dip in GIS & RS, - M.Phil in Geography.
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு: 0775122936 - 0770119434

4SIGHT OPTICALS
08B 1ம் மாடி
கார்கில்ஸ் சதுக்கம்
யாழ்ப்பாணம்.
அனைத்து விதமான மூக்குக் கண்ணாடிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
021 222 3038 / 077 700 2411

CNR world wide Express
International Courier & Cargo Service.
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.
இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1983.06.18 | பிறந்த திகதி - 1984.10.10 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - உத்தரம் 1 | நட்சத்திரம் - பூரட்டாதி 1 |
| செவ் - 01இல் | சூ/செவ் - ------- |
| பாவம் - 21 | பாவம் - 13 1/4 |
| கல்வி - BSc பட்டதாரி | கல்வி - MBBS |
| தொழில் - T.O | தொழில் - Doctor |
| எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் | எதிர்பார்ப்பு - Doctor or Engineer |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்ப படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி, பருத்தித்துறை பிரதான வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.02.2021 இல் வெளியிடப்பெற்றது.

# இலங்கையை நெருக்கடிக்குள் தள்ள ஜெனிவாவிலும் உள்நாட்டிலும் சூழ்ச்சி!

## என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையை பாரிய நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் சர்வதேச மற்றும் உள்ளக மட்டத்தில் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையின் உள்ளடக்கத்தை அரசாங்கம் நிபந்தனைகளற்ற வகையில் நிராகரிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் உள்ளக விடயங்களில் தலையிடும் உரிமை மனித உரிமை பேரவைக்குக் கிடையாது. ஆகவே, உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உபாயங்களைக் கொண்டு இம்முறை தீர்வு காண்பது அவசியமாகும் என சுட்டிக்காட்டி தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் இந்த மாதம் இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடர் தொடர்பாக இலங்கை தொடர்பில் கடந்த மாதம் 27 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆணையாளரின் இலங்கை தொடர்பான மதிப்பீட்டறிக்கை தொடர்பாக அரசாங்கம் கடும் அதிருப்தி அடைந்துள்ளமை ஊடகங்கள் ஊடாக அறிய முடிந்துள்ளது.

2015 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக மனித உரிமை ஆணையாளர் முன்வைத்த பாரதூரமான யுத்தக் குற்றச்சாட்டுக்களை நல்லாட்சி அரசாங்கம் ஏற்றமை தற்போதைய நெருக்கடிக்கு மூல காரணியாகக் காணப்படுகிறது.

இம்மாதம் இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முனைவதாகவே ஆணையாளரின் மதிப்பீட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தரப்பினரை சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்தல் இவர்களின் சொத்துக்களை முடக்கல் ஆகிய விடயங்களில் அதிக அக்கறை கொள்ளப்பட்டுள்ளது. இது பாரதூரமானது என்பதற்கு மாற்றுக்கருத்துக் கிடையாது.

மனித உரிமை ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையை ஏற்கமுடியாது என்று மறுப்புத் தெரிவிப்பதால் மாத்திரம் சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள சவால்களை வெற்றி கொள்ள முடியாது. பிரித்தானிய அரசாங்கத்தின் தலைமையின் கீழ் செயற்படும் நாடுகள் இலங்கைக்கு எதிராகப் புதிய பிரேரணையை கொண்டு வர தீர்மானித்துள்ளன என அறிய முடிகிறது.

2015 ஆம் ஆண்டும் இவ்வாறான தன்மையே காணப்பட்ட.து. 2020 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் இடம்பெற்ற கூட்டத்தொடரில் அரசாங்கம் நல்லாட்சி அரசாங்கம் இணையனுசரணை வழங்குவதாக இணக்கம் தெரிவித்த 30.1 பிரேரணையில் இருந்து விலகியமை ஏற்றுக் கொள்ளக் கூடியது. 30.1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை செயற்படுத்தும் வகையில் இம்முறை புதிய பிரேரணை மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்படும் என்பதை உணர முடிகிறது.

அரசாங்கத்தை சர்வதேச அரங்கில் நெருக்கடிக்குள்ளாக்கும் சர்வதேச மட்டத்திலும், உள்ளக மட்டத்திலும் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் உரிமை மனித உரிமை பேரவைக்குக் கிடையாது.

ஆரம்ப காலத்தில் இருந்து நாமும் இந்த விடயத்தில் சற்று இறுக்கமாக செயற்பட்டிருக்க வேண்டும். ஆகவே, இம்முறை இடம்பெறவுள்ள 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் முன்வைக்கும் பிரேரணைகளை அரசாங்கம் நிபந்தனையற்ற வகையில் இரத்துச் செய்ய வேண்டும்.

கடந்த அரசாங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகத்தை சர்வதேச கண்காணிப்பில் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமை எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என கடந்த அரசாங்கத்திற்கு எடுத்துரைத்தோம். ஆனால் அவை குறித்த நல்லாட்சியின் அரச தலைவர்கள் கவனம் செலுத்தவில்லை. காணாமல் போனோர் அலுவலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை சர்வதேச நீதிமன்றிற்கு கொண்டு செல்லும் அளவிற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளமை அவதானத்திற்குரியது.

சர்வதே அரங்கில் முன்வைக்கப்படும் பிரேணைகளுக்கு இணையனுசரணை வழங்குவதாகவும், பரிசீலனை செய்வதாகவும் குறிப்பிட்டால் இலங்கை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும். 2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்கு கால அகாசம் கோருகின்றமை அவசியமாகும்.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட மெக்ஷ்வெல் பரணகம ஆணைக்குழுவினரால் வழங்கப்பட்ட 6 அறிக்கையில் இலங்கை இராணுவத்தினரால் யுத்த குற்றங்கள் இடம்பெறவில்லை. எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பிரித்தானியரான நேஸ்பி ாம் இலங்கைக்கு சார்பாகவே செயற்பட்டுள்ளார். இலங்கை தொடர்பில் சர்வதேச அரங்கில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், இலங்கைக்கான பூகோளிய ஒன்றியம் அறிக்கை தயாரித்துள்ளது. இந்த அறிக்கையை மனித உரிமை பேரவையில் சிவில் அமைப்புக்கள் சார்பில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உபாயங்களை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பது அவசியமாகும். இந்த விடயத்தில் அனைத்து தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட அறிக்கைகளும் முழுமையாக பரிசீலனை செய்கின்றமை சாதகமாக அமையும். – என்று தெரிவித்துள்ளது.

# முகப்புத்தகத்தில் வெறுப்புணர்வை தூண்டிய சந்தேகநபர் பற்றிய வெளிப்படுத்திய தகவல்!

இனங்களுக்கிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வண்ணமான வெறுப்புணர்வை தூண்டும் பேச்சுக்களை முகப் புத்தகம் ஊடாக வெளியிட்டார் எனக் கூறி கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வரும் தெஹிவளையைச் சேர்ந்த பசால் மொஹம்மட் நிசார் விவகாரத்தில் பல்வேறு அதிர்ச்சித் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிக் கணினி ஆகியவற்றை பகுப்பாய்வு செய்த போது, சந்தேக நபர் சட்ட விரோதமாக, மிக இரகசியமான முறையில் இணையவழி தொடர்பாடல் கட்டமைப்பொன்றை நிறுவி அதனை முன்னெடுத்துச் சென்றுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக சி.ஐ.டி.யினர் கொழும்பு பிரதான நீதிவான் மொஹம்மட் மிஹாலுக்கு அறிவித்தனர்.

இந்த தொடர்பாடல் கட்டமைப்பு ஊடாக, இலங்கையின் எந்தவொரு தொலைபேசி சேவைக்கும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என்பதும், அவ்வாறு ஏற்படுத்தப்படும் அழைப்புக்கள் தொலைபேசி விவரப் பட்டியலில் பதிவாகாது என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக விடேஅறிக்கை ஊடாக சி.ஐ.டி. நீதிவானுக்கு அறிவித்துள்ளது.

சுமார் 450 இற்கும் அதிகமான பயனாளர்களை கொண்டுள்ள இந்தக் கட்டமைப்பில், முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும் உள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவித்த சி.ஐ.டி., இந்த தொலைபேசி கட்டமைப்பு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புபட்டவர்களாலும் பயன்படுத்தப்பட்டதா என விரிவான விசாரணை ஒன்று இடம்பெறுவதாக நீதிவானுக்குக் கூறினர்.

பசால் மொஹம்மட் நிசார் எனும் சி.ஐ.டி. பொறுப்பில் உள்ள சந்தேக நபர் தொடர்பில், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பட்டு சட்டத்தின் 3 (1) ஆம் உறுப்புரைக்கு அமையவும், தண்டனை சட்டக் கோவையின் 120 ஆம் அத்தியாயத்தின் கீழும், 20017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றங்கள் தொடர்பிலான சட்டத்தின் 6 (1) ஆம் அத்தியாயத்தின் கீழும் 1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கர்வாத தடை சட்டத்தின் கீழும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் விசாரணையின் முன்னேற்றம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் சேனாரத்ன கொழும்பு பிரதான நீதிவானுக்கு அரிவித்தார். அது சார்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே அவர் விஷேட அறிக்கையொன்றையும் கையளித்து விசாரணையின் நிலைமை தொடர்பில் அறிவித்தார்.

அதன்படி, சந்தேக நபரின் பொறுப்பில் இருந்து சி.ஐ.டி. கைப்பற்றிய கையடக்கத் தொலைபேசி, மடிக் கணினி ஆகியவை சி.ஐ.டி.யின் டிஜிட்டல் பகுப்பயவுப் பிரிவினரால் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேக நபர், மிக இரகசியமான முறையில் இணையம் ஊடாகத் தனியான தொலைத் தொடர்புகள் கட்டமைப்பொன்றை முன்னெடுத்துச் சென்றுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக சி.ஐ.டி.யினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

இலங்கை தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் அனுமதியின்றி சட்ட விரோதமாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொலை தொடர்புகள் கட்டமைப்பு ஊடாக, இலங்கையில் இயங்கும் எந்தவொரு தொலைபேசி கட்டமைப்புக்கும் அழைப்பை ஏற்படுத்த முடியுமாக இருந்துள்ளதாக கூறும் சி.ஐ.டி., அவ்வாறு ஏற்படுத்தப்படும் அழைப்புக்கள் எந்த தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனத் தகவலிலும் பதிவாகாது என விசாரணையில் தெரியவந்ததாக நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தது.

இவ்வாறான இரகசிய தொடர்பாடல் முறைமை ஒன்றை முன்னெடுத்து சென்றமையானது, குற்றவியல் வழக்குகளின் போது தொலைபேசி அழைப்புப் பதிவுகளை சான்றுகளாக கொள்ளும் நடைமுறைக்கும் சவாலாக உள்ளதாக சி.ஐ.டி. அறிக்கை ஊடாக நீதிமன்றின் கவனத்துக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த கட்டமைப்பில் 450 இற்கும் அதிகமான பயனாளர்கள் இருந்துள்ளதாக இதுவரையான விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக கூறும் சி.ஐ.டி.யினர், அந்தப் பயனாளர்களின் உண்மை அடையாளங்கள் எதுவும் பதிவாகவில்லை எனவும், அனைவரும் புனைபெயர்களிலேயே பயனாளர்களாக இருந்துள்ளனர் எனவும் சி.ஐ.டி.யினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் இந்த கட்டமைப்பைப் பயன்படுத்தியவர்களில் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் எவரேனும் உள்ளனரா எனவும் விசாரணைகள் இடம்பெறும் நிலையில், சில முஸ்லிம் அரசியல்வாதிகளும் இந்த தொலை தொடர்பு கட்டமைப்பை பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெருவதாகவும் , மேலதிக விசாரணை அறிக்கை ஊடாக சி.ஐ.டி. நீதிவானுக்கு அறிவித்துள்ளது.

இந்த தொலை தொடர்பு கட்டமைப்பை பயன்படுத்தும் போது, முதலில் ஒரு குறுந்தகவல் வருவதாகவும், அந்த தகவலில்,' முஸ்லிம்களின் பிரதான இரகசிய தொடர்பாடல் கட்டமைப்பாக குறித்த கட்டமைப்பை பற்றி, அதனை விருத்தி செய்ய குறுந்தகவலில் கொடுக்கப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு' பயனாளர்கள் கேட்கப்படுகின்றனர் எனவும் சி.ஐ.டி. நீதிமன்றுக்கு தெரிவித்துள்ளது.

இந் நிலையில், இந்த கட்டமைப்பு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என தீவிர விசாரணைகள் இடம்பெறும் நிலையில், இது தொடர்பான மேலதிக வழக்கு விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# விமலின் செயற்பாட்டால் கவலையுறும் பெரமுன!

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கூட்டணியமைத்துள்ள பங்காளி கட்சிகள் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அமைச்சர் விமல் வீரவன்சவின் செயற்பாடு கவலைக்குரியது. சமூகத்தின் மத்தியில் வீரன்போல கருத்துரைப்பவர்களின் அச்சுறுத்தலுக்கு அரசாங்கம் அடிபணியாது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன சார்பில் தேர்தல் களத்தில் 252 வேட்பாளர்கள் பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

2020 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த அரசாங்கத்தையே பொறுப்பேற்றோம். கொவிட் – 19 வைரஸ் தாக்கம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தியது. சிறந்த திட்டமிடலுக்கு அமைய பொருளாதாரம் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், அரசாங்கம் கடந்த வருடத்தில் இருந்து பாரிய நிதி செலவிடப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை காணப்பட்டது. கிழக்கு முனையத்தின் 49 சதவீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவது தொடர்பாகத் தீர்மானம் ஏதும் எடுக்கவில்லை. யோசனை மாத்திரமே முன் வைக்கப்பட்டது. இந்த விடயத்தைக் கொண்டு எதிர் தரப்பினர் அரசியல் பிரசாரங்களை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுத்தார்கள். ஆளும் தரப்பின் உறுப்பினர்களும் அதற்குச் சார்பாகவே செயற்பட்டார்கள்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமவ் வீரவன்ஸ 10 கட்சிகளை ஒன்றிணைத்து செயற்பட்ட விதம் மற்றும் ஊடகங்களுக்கு குறிப்பிட்ட செய்தி முற்றிலும் தவறானது. பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் கூட்டணி அமைத்துள்ளவர்கள் கூட்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்துக்குள் பேச வேண்டிய விடயத்தை சமூகத்தின் மத்தியில் செயல் வீரன்போல் பேசுகின்றமையால் எவ்வித பயனும் ஏற்படாது. எவரின் அச்சுறுத்தலுக்கும், அழுத்தங்களுக்கும் ஜனாதிபதி அடிபணியமாட்டார். பேச்சு சுதந்திரம் காணப்படுகிறது என்பதற்கான கட்சியின் கொள்கைக்குப் புறம்பாகச் செயற்பட முடியாது. ஆகவே, அமைச்சர் விமல் வீரவன்ஸ செயற்பட்ட விதம் கவலைக்குரியது. – என்றார்.